Home (TPt)
C.T & Reg Dept

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION
(2009-2010)

(THIRTEENTH ASSEMBLY)

TENTH REPORT

(Presented to the Assembly on 27 APR 2010)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Legislative Assembly Secretariat,
Chennai- 600 002.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION
(2009-2010)

(THIRTEENTH ASSEMBLY)

TENTH REPORT

TRUTH ALONE TRIUMPHS

CONTENTS

	Pages
Composition of the Committee	iii
PART - I	
Introduction	1
PART - II	
1. Notifications Issued Under Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974	2
2. Notifications Issued Under Tamil Nadu Tax on Luxuries Act, 1981.	3
3. Notifications Issued Under Tamil Nadu General Sales Tax Act, 1959.	4 - 6
Proceedings	7 - 55

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION (2009-2010)

(CONSTITUTED ON 12TH AUGUST 2009)

CHAIRMAN

1. Thiru. T. Mahesh Krishnasamy

MEMBERS

2. Thiru. K. Chinnadurai
3. Thiru. T. Theodore Reginald
4. Thiru. A. Soundarapandian
5. Thiru. H. Abdul Basith
6. Thiru. G. Senthamizhan
7. Thiru. K.S. Vijayakumar
8. Thiru. O.K. Chinnaraj
9. Thiru. R.M. Palanisami
10. Thiru. Polur M. Varadhan
11. Tmt. P. Kamalambai
12. Thiru. T.A. Meganathan

SECRETARIAT

Thiru. M. Selvaraj	..	Secretary
Thiru. A.M.P. Jamaludeen	..	Joint Secretary
Thiru. P.S.K. Singaravelu	..	Under Secretary

REPORT OF THE COMMITTEE ON DELEGATED LEGISLATION

PART- I

INTRODUCTION

I, the Chairman of the Committee on Delegated Legislation having been authorised by the Committee present this Tenth Report on its behalf.

This Report includes some of the observations and decisions of the Committee for the year 2006-2007 and 2007-2008 based on the consideration of the Memoranda that were placed before it. The present Committee for 2009-2010 after having carefully perused the Memoranda and the proceedings thereon, endorses those observations and decisions without any modifications.

SITTINGS OF THE COMMITTEE

The Committee for 2006-2007, which was constituted on 7-8-2006, and the Committee for 2007-2008 was constituted on 15-5-2007. The Committee for the year 2006-2007 and 2007-2008 met for 10 days. It also undertook a Study Tour in the States of Maharastra, New Delhi, Uttar Pradesh, Punjab, West Bengal, and Andaman and Nicobar Islands from 3-1-2007 to 12-1-2007 and in the States of New Delhi, Rajesthan, Punjab, Himachal Pradesh and Gujarat from 15-2-2208 to 24-2-2008.

ITEMS CONSIDERED BY THE COMMITTEE

The Committee considered 60 Memoranda and 5 Note for Committee covering rules, amendments to rules, notifications etc., laid on the Table of the House and statement of action taken and further action taken on the recommendations of the Committee contained in Tenth Report (XI Assembly), Sixteenth Report (XI Assembly) and Twentieth Report (XI Assembly).

This Report exclusively deals with notifications and amendments to the rules issued under the Tamil Nadu Taxation Laws. Extract of the proceedings of the meetings of the Committee are appended to this Report.

The Committee considered and approved this Report on the 13th October 2009.

TRUTH ALONE TRIUMPHS

PART II

1. NOTIFICATIONS ISSUED UNDER TAMIL NADU MOTOR VEHICLES TAXATION ACT, 1974

(G.O.Ms.No.836/Home Department, Dt.21-9-2005)

In exercise of the powers conferred under Section 20(1) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (T.N.Act,13 of 1974) the Government had issued orders exempting from payment of life time tax for the Honda City A/C car having the chassis No.MA KGD 851G 5N 221985 and the Engine No. L15A 30055698 owned by the Member Secretary, Tamil Nadu State Legal Authority, Chennai.

The Committee observed that though the Government was empowered to issue notifications exempting the rate of Tax under Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974, such powers might be exercised on reasonable grounds.

Joint Secretary stated the Committee was of the view that power of giving concession should be used sparingly and should be exercised on reasonable grounds and that the Committee had decided to seek the reasons or grounds which necessitated granting exemption to the person referred to in the notification from the Home Department and recommended accordingly.

But the Home Department has not sent any reply so far, he added.

The Committee records that even though communications had been sent to the Government Department, the Committee had not received any reply so far from the Government in Home Department.

TRUTH ALONE TRIUMPHS

2. NOTIFICATIONS ISSUED UNDER TAMIL NADU TAX ON LUXURIES ACT, 1981.

(G.O. Ms. No. 112, Commercial Taxes and Registration (C-2) Department, dated 20-9-2006)

*****

In exercise of the powers conferred under Section 23-A (1) of the Tamil Nadu Tax on Luxuries Act 1981 (T.N. Act 6 of 1981) the Government had issued orders exempting the luxury Tax payable under the said Act on luxury provided in a hotel in Tamil Nadu by the employees or representatives of the World Bank, subject to the condition that the World bank should issue a certificate of stay, to that hotel quoting this notification number, name and the period of stay.

The committee observed that the date of effect of the notification had not been mentioned.

Joint Secretary stated that the draft report related to the recommendations made to certain rules issued under the Tamil Nadu Tax on Luxuries Act, 1981 and Tamil Nadu General Sales Act, 1959

Joint Secretary then briefed the Committee about the recommendations made by the Committee.

Additional Commissioner (Commercial Taxes) replied that the recommendation of the Committee would be taken due care of and necessary steps would be taken in this regard.

The Committee, accepting the reply given by the Additional Commissioner (Commercial Taxes), decided not to modify its earlier recommendation.

TRUTH ALONE TRIUMPHS

3. NOTIFICATIONS ISSUED UNDER TAMIL NADU GENERAL SALES TAX ACT, 1959.

(G.O.Ms.No.73, Commercial Taxes and Registration (D2) Department, dated 24-2-2006).

In exercise of the powers conferred under Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty of fee payable in respect of any period by any dealer under this Act and in excerise of the powers conferred under the above Section read with Section 3(2) and 3-A(2) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act,1971. (T.N. Act 24 of 1971) the Government had issued orders remitting a sum of Rs.38,248-/ being the Surcharge and additional surcharge payable on the sale of peas and peas Dhall for the period from 1-4-1992 to 24-12-1992 by TVL. Kirorimal Kashiram, subject to the condition that the said dealer should have collected the surcharge and additional surcharge on the said sale.

Joint Secretary briefed about the observation of the Committee made in this regard and that the Committee had decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department and stated that a clarification was sought from the Department concerned and no reply was received from the Department.

கூடுதல் ஆணையாளர் (வணிக வரிகள்): ஒரு வணிகருக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை அரசாணையில் விடுபட்டுப் போய்விட்டது. எனவே, அதனைச் சரி செய்வதற்காக மேற்கண்ட அறிவிக்கை வெளியிட வேண்டியிருந்தது. இதைத் தவிர வேறு நோக்கம் எதுவும் இல்லை.

The Committee, accepting the reply furnished by the Additional Commissioner (Commercial Taxes) decided to recommend that such type of lapses should be guarded in future.

(ii) G.O. (D) No.154, Commercial Taxes and Registration (D2) Department, dated 27-10-2006.

(iii) G.O. (2D) No.148, Commercial Taxes and Registration (D2) Department, dated 13-9-2006.

In exercise of the powers conferred under Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty of fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government have issued the above notifications.

Joint Secretary stated that the Commissioner (Commercial Taxes) had issued two different clarifications in the issue and that Committee had observed that in recent times the Commercial Tax Department used to issue orders remitting the huge payment of Commercial Taxes and this led to a heavy loss to the tune of Rs.1,11,73,433/- to the government exchequer.

Joint Secretary further stated that the Committee had decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department to the effect that what necessitated the Commissioner of Commercial Taxes to issue such two different clarifications.

He added that a clarification was sought from the Department concerned and no reply was received from the Department.

கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): அந்தச் சமயத்தில், ஆர்.டி.எஸ். கிரில்ஸ் என்பது எலெக்ட்ரிக்கல் பொருளா இல்லையா என்பதை முடிவு செய்வதில் சந்தேகம் இருந்ததால் இந்தமாதிரியான நிலை ஏற்பட்டது. தணிக்கைத் துறையினர் கொடுத்த டெபினிஷன், பின்னர்தான் எங்கள் கவனத்திற்கு வந்தது. அந்த டெபினிஷன் சட்டத்தில் இல்லை.

தலைவர்: இதுபோன்ற சூழ்நிலைகளில், துறை அதிகாரிகள், expert opinion கேட்டுப் பெற்றோ, அல்லது இதுபோன்ற நிகழ்வுகளில் மற்ற மாநிலங்களில் உள்ள நடைமுறை என்ன என்பதைக்கூட அறிந்தோ, அல்லது மின்சார வாரிய அலுவலர்களைக் கலந்தாலோசித்தோ முடிவு எடுத்து இருக்கலாம். இவ்வாறு செய்யாததன்

காரணமாக அரசுக்கு ரூ.1,11,73,433/– இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நேரா வண்ணம் துறை கவனமுடன் இருக்க வேண்டும்.

திரு. எச். அப்துல் பாசித்: எலெக்ட்ரிக்கல் மெட்டீரியல் என்று டெபினிஷன் இல்லை என்று சொல்கின்ற நேரத்தில், மின்சார வாரியம், வணிக வரிகள் துறை மற்றும் மின்னியல் துறை பொறியாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு வல்லுநர் குழு அமைத்து அதற்கு appropriate definition கொடுக்கலாம். இனிவரும் காலங்களில் இம்மாதிரியான குழு அமைத்து அவர்களுடைய கருத்தையும் கேட்டறிந்து செயல்படலாம்.

கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): இப்போது புதியதாக ஒரு கருத்துரு தயார் செய்திருக்கிறோம். Central Excise and Customs Department–ல் இருப்பதைப் போல Advanced Ruling Authority என்ற ஒரு தீர்ப்பாயம் அமைக்க இருக்கிறோம். இதுபோன்ற நிகழ்வுகளில், இத்தீர்ப்பாயமானது, இதில் உள்ள அனைத்து அம்சங்களையும் தீர ஆராய்ந்து தன்னுடைய விளக்கத்தினை அளிக்கும். இந்தத் தீர்ப்பாயம் அளிக்கும் adjudication டீலர் மற்றும் துறையினைக் கட்டுப்படுத்தக்கூடியதாக அமையும். இதற்கான ஒரு சட்டமுன்வடிவுகூட, வருகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்ய இருக்கிறோம். இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாக்கப்பட்டு, Advanced Ruling Authority அமைக்கப்பட்டுவிட்டால், இதுபோன்று இரண்டுவிதமான கிளாரிபிகேஷன் கொடுக்கின்ற நிலை ஏற்படாது. எனவே இனி வரும் காலங்களில் இந்தமாதிரி பிரச்சினை வராது என்று நினைக்கின்றேன்.

மேலும், அரசாணை எண் 148, வணிக வரிகள் துறை, நாள் 13–9–2006–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையும் இதுபோன்று இரண்டுவிதமான விளக்கங்கள் அளிக்கப்பட்ட நிகழ்வாகும். நான் ஏற்கெனவே கூறியபடி, Advanced Ruling Authority என்ற அந்த ஆணையம் அமைக்கப்பட்டுவிட்டால் இனி இம்மாதிரி பிரச்சினைகள் ஏற்படாது.

CHAIRMAN: We have given certain powers to the Executive and accordingly you people can give exemption, reduction or remission of tax. But whatever it is, this power should be used sparingly. It is our duty to monitor whether the powers given by the Assembly had been judiciously exercised or not.

கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): இந்தமாதிரி நிகழ்வுகள் இனி ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த Advanced Ruling Authority என்ற அந்த ஆணையத்தை அமைக்க இருக்கிறோம். அந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டால் இப்பிரச்சினைகளுக்கெல்லாம் நிரந்தரத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee, based on the assurance given by the Additional Commissioner (Commercial Taxes) that all these defects would be rectified on the formation of the Advanced Ruling Authority, decided not to seek further clarification in this regard.

G.O.(2D) No.192, CT & Reg.(D2) Department, dated 11-12-2006.
G.O.(2D) No.200, CT & Reg. (D2) Department, dated 26-12-2006.

In exercise of the powers conferred under Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) the Government issued the Notification remitting the Tax payable by the traders.

கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): மேற்கூறிய அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளும் இதுபோன்று இரண்டுவிதமான விளக்கங்கள் அளிக்கப்பட்ட நிகழ்வுகளாகும். நான் ஏற்கெனவே கூறியபடி, Advanced Ruling Authority என்ற அந்த ஆணையம் அமைக்கப்பட்டுவிட்டால் இனி இம்மாதிரி பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பில்லை.

The Committee, based on the assurance given by the Additional Commissioner (Commercial Taxes) that all these defects would be rectified on the formation of the Advanced Ruling Authority, decided not to seek clarification from the Government in this regard.

G.O. (2D) No.204, CT & Reg.(D2) Department, dated 28-12-2006

In exercise of the powers conferred under Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) the Government issued orders remitting the tax payable referred to therein

Joint Secretary stated that in the instant case, the Commissioner, Commercial Taxes had issued two different clarifications effecting a revenue loss to the tune of Rs.1,84,576/- to the exchequer and the Committee had decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department to the effect that what necessitated the Commissioner of Commercial Taxes to issue two different clarifications.

கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): சில சமயங்களில், ஒருசில பொருட்கள் இரண்டு என்ட்ரியிலும் விழுகிற மாதிரி தெரியும். இதிலும், ஆர்.டி.எஸ். கிரில் மாதிரிதான் நடந்திருக்கிறது. பொதுவான பொருள், மின்சாரம் சம்பந்தப்பட்ட பொருள் என்பதில் இரண்டுவிதமான கருத்துகள் நிலவிய காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டது. எனினும், இந்த Advanced Ruling Authority என்ற இந்த ஆணையம் அமைந்துவிட்டால் இனி இம்மாதிரி பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்: வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை தொட்டிகள் என்பது சிமெண்ட் பொருளா அல்லவா என்பதை முடிவு செய்வதில் ஏன் இவ்வாறு சந்தேகம் ஏற்பட்டது?

கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): எக்சைஸ் துறையிலும் இந்தமாதிரியான நிகழ்வுகள், அதாவது கிளாசிபிக்கேஷன் பிரச்சினைகள் வருகின்றன.

நீதிமன்ற வழக்குகள் நிறைய வருகின்றன. ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு என்ன விகிதத்தில் வரி விதிப்பது என்பதில் இரண்டுவிதமான கருத்துகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. லாட்டரி டிக்கெட் இதற்கு நல்ல உதாரணம். லாட்டரி டிக்கெட்டிற்கு வரி உள்ளது என்று ஒரு Constitution Bench கூறியது. மீண்டும் சில நாட்கள் கழித்து அதற்கு வரி வராது என்று சொல்லிவிட்டார்கள். வாட் வரி விதிப்பு முறை வந்தபிறகு இந்த கிளாசிபிக்கேஷன் மாறியிருக்கிறது. சில அத்தியாவசியப் பொருட்களுக்கு மட்டும் வரி குறைக்கப்பட்டு மற்ற அனைத்திற்கும் 12.5% என்ற அளவிற்கு வரி விதிக்கப்படுகிறது. வரவிருக்கும் ஜி.எஸ்.டி.-யில் இன்னும் எளிமைப்படுத்தப் போகிறோம். எனினும் இந்தமாதிரி ஒரு அத்தாரிட்டி வந்துவிட்டால், அதனுடைய முடிவுகள் judicial முடிவுபோல் இருக்கும்.

தலைவர்: இனி வரும் காலங்களில் இந்தமாதிரி பிரச்சினை வராமல் இருப்பதற்கு உறுதி கொடுத்திருக்கிறீர்கள்.


கூடுதல் ஆணையர் (வணிக வரிகள்): ஆம். இனி இதுமாதிரியான பிரச்சினை வருவதற்கு வாய்ப்பு இருக்காது.

The Committee accepted the reply furnished by the Additional Commissioner (Commercial Taxes) and decided not to seek further clarification in this regard.

The Committee then approved the Draft Main Report as modified and authorized the Chairman to sign and present the report to the Assembly on its behalf.

CHENNAI - 600 002.
13th October 2009.
Purattasi 27,
Thiruvalluvar Aandu-2040.

T. MAHESH KRISHNASAMY,
CHAIRMAN.



PROCEEDINGS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PROCEEDINGS OF THE COMMITTEE ON DELEGATED LEGISLATION

TUESDAY, THE 21st NOVEMBER 2006

The Committee on Delegated Legislation met at 3-00 a.m. on Tuesday, the 21st November 2006 in the Conference Hall, Legislators' Residential Quarters, Chennai-600 002.

The following were present:

CHAIRMAN

Thiru. R. Rajendran

MEMBERS

Thiru. V.S. Babu

Thiru. K. Murugavel

Thiru. T. Mahesh Krishnasamy

Thiru. D. Selvaraj

Thiru. T.A. Meganathan

Thiru. G. John Joseph

SECRETARIAT

Thiru. A.M.P. Jamaludeen .. Deputy Secretary

Tmt. Janahee, Joint Secretary to Government, Law Department, was also present.

Deputy Secretary (Assembly) welcomed the Chairman and Members.

The Committee took up for consideration the following Memmoranda:

MEMORANDUM No.1/2006-2007

Sub : Tamil Nadu General Sales Tax Act, 1959 - Notification issued.
(G.O. Ms. No. 70, Commercial Taxes (B2) Department, dated 15.6.2005)

*****

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Sub-section 3 of Section 17 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959), the Government cancelled the Commercial Taxes Department Notification No.II(1)/CT/8/2005 published at page 24 of Part - II Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated 9th February, 2005 thereby cancelling the sales tax exemption granted to Tvl. Kshema Rehabilitation Training Centre, Chettupattu, Thiruvannamalai District on the sale of goods produced during the course of training conducted by them for the period 1st July 2003 to the 31st March 2006 in order to give sales tax exemption with effect from 1st April 2003.

He also pointed out that the Government had exempted sales tax in respect of goods produced during the course of Training conducted by Tiruvalargal. Kshema Rehabilitation Training Centre, Chettupattu, Tiruvannamalai District during the period 1.4.2003. to 31.3.2006.

தலைவர்: இந்தப் பயிற்சி மையத்தில் என்னென்ன பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? மொத்த விற்பனை எவ்வளவு போன்ற விவரங்களைச் சொல்லுங்கள்.

அரசு இணைச் செயலாளர்: இந்த மையத்தில், Handloom cloth weaving, Grass mat, Hand Block Printing, Wood Carving, Cane work and Hand embroidery for cured leprosy patients, போன்ற வேலைகள் செய்யப்படுகின்றன. உடல் ஊனமுற்றோர் மற்றும் சமூகப் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய ஆண்டு டர்ன் ஓவர் ரூ.3,19,759/– ஆகும். இதற்கு வரி மிகவும் குறைவாகத்தான் இருக்கும். இவர்களுக்கு இந்தச் சலுகை 1999 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மீண்டும் சலுகை பெற விண்ணப்பிக்கின்றனர்.

திரு. து. செல்வராஜ்: இம்மாதிரி வரிச் சலுகை வேறு ஏதாவது நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றதா? முறைகேடுகள் பற்றிய புகார் ஏதேனும் வந்திருக்கின்றதா?

அரசு இணைச் செயலாளர்: பல்வேறு காலகட்டங்களில் மொத்தம் 528 நேர்வுகளில் சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. முறைகேடுகள் பற்றிய தகவல் ஏதும் இல்லை. அவ்வாறு முறைகேடுகள் இருப்பது தெரிய வந்தால் கொடுத்த சலுகை நிறுத்தப்பட்டு வரிவிதிக்கப்படும்.

தலைவர்: வரிச் சலுகைகள் கொடுப்பதற்காக guidelines அல்லது norms ஏதேனும் வைத்திருக்கிறீர்களா? குறிப்பிட்ட நிறுவனங்களுக்குத்தான் சலுகை தரப்பட வேண்டும் என்று ஏதாவது இருக்கின்றதா?

அரசு இணைச் செயலாளர்: Guidelines வைத்து கொடுப்பதில்லை. ஒவ்வொரு காலகட்டத்தில் நிறுவனங்கள் விண்ணப்பிக்கும்போது அரசு அதனைப் பரிசீலித்து, அதனை ஆணையாளர் பரிந்துரை செய்ய வேண்டும். சமூக நலத் துறையும் கலந்தாலோசிக்கப்படும். சலுகை கொடுப்பது அவசியமா,

தேவையா என்று ஆராயப்படும். அதன் பின்னர், சுற்றாணை பெறப்பட்டு ஆணை வெளியிடப்படுகிறது. சலுகைத் தொகை அதிகமாக இருந்தால் அமைச்சரவை ஒப்புதல் வாங்கப்படும்.

தலைவர்: தங்களுடைய பதில் ஏற்கப்படுகிறது. இருந்தபோதிலும் என்னென்ன பொருட்களுக்கு சலுகை அளிக்கப்படுகின்றன என்கின்ற மாதிரி அறிவிக்கையில் போட முடியாதா?

அரசு இணைச் செயலாளர்: தற்போது பொதுவாகப் போடுகிறோம். குறிப்பிட்ட பொருள் பற்றி கேட்டுத்தான் போடவேண்டும்.

தலைவர்: மொத்த வரி விலக்கு எவ்வளவு இருக்கும்?

அரசு இணைச் செயலாளர்: மொத்த டர்ன் ஓவர் ரூ. 3.19 இலட்சம் வருகிறது. சராசரியாக ஒரு வருடத்திற்கு மூன்றேகால் இலட்சம் வரை வரும். முழு வரி விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் வரை வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம். மொத்த விற்பனை ஒரு கோடி ரூபாய் என்றால் முடிவு வேறு மாதிரிகூட இருந்திருக்கும்.

தலைவர்: வரிச் சலுகை எவ்வளவு காலத்திற்கு கொடுக்கப்படுகிறது?

அரசு இணைச் செயலாளர்: பொதுவாக மூன்று வருடங்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதன் பிறகு நிறுவனங்கள் விண்ணப்பித்தால் பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்படும்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 2/2006-2007

Sub : Notifications issued under Tamil Nadu Tax on Entry of Goods into Local Areas Act, 2001.
(G.O.Ms.No.167, Commercial Taxes(C2) Department, Dated 21-10-2004)
(G.O.Ms.No.20, Commercial Taxes (C2) Department, Dated 2-3-2005)

******

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 11 of the Tamil Nadu Tax on Entry of Goods into Local Areas Act, 2001, the Government had issued orders exempting every importer who imports scheduled goods directly from a foreign country for use in any manufacturing unit in this State from payment of Tax under Section 3 of the said Act, subject to production of a Declaration in the Form appended to the notification.

He also stated that the Government had issued orders exempting every importer who is a registered dealer under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) who imports scheduled goods directly from a foreign country and sold for use in the manufacture by 100% Export Oriented Units and units situated in Madras Export Processing Zone and Special Economic Zone in Tamil Nadu, subject to a production of a declaration by an Importer in Form I and the Manufacturer in Form II prescribed thereunder in respect of tax payable under Section 3 of the said Act.

He further added that the Government had issued orders exempting the tax payable over and above 3% by (1) Thiruvalargal Madurai Power Corporation Private Limited, Samayanallur, (2) Thiruvalargal Samalpatti Power Company Private Limited, and (3) Thiruvalargal G.M.R. Power Corporation Private Limited on the import of Low Sulphur Heavy Stock (LSHS) under the said Act.

அரசு இணைச் செயலாளர்: இது தனியார் மின்சார உற்பத்திக் கழகம். அவர்கள் மின்சாரம் உற்பத்தி செய்து மின்சார வாரியத்திற்குக் கொடுக்கிறார்கள். மின்சாரத்திற்கு வரி போட முடியாது. இந்த மின்சார உற்பத்தியில் பயன்படுத்தப்படும் Low Sulphur Heavy Stock (LSHS) – என்ற பொருளை வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவருவதற்கு 16 சதவிகிதம் நுழைவு வரி விதிக்கப்படுகிறது. இந்தப் பொருளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்மீது வரி விதிக்கப்படுகிறது. ஆனால், output-ஐ நுழைவு வரிக்காக அட்ஜஸ்ட் செய்ய முடியாது. அதனால் 14 சதவிகிதம் வரித் தள்ளுபடி கொடுங்கள் என்று கேட்டார்கள். இல்லையென்றால் பார்ம் 17–சியில் ஒரு டிக்ளரேஷன் கொடுத்துவிடுவார்கள். குறைந்தபட்சம் 3 சதவிகிதம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இல்லையென்றால் மற்ற மாநிலங்களுக்குச் சென்றுவிடுவார்கள். அதனால் 3.1 சதவிகிதம் வரை வரிச் சலுகை கொடுக்கப்பட்டாலும்கூட அது நமக்குக் கூடுதல் வருவாய்தான். Output-க்கு அட்ஜஸ்ட் செய்ய முடியாது. 2003 ஆம் ஆண்டிற்கான புதிய தொழில் கொள்கையின்படி, entry tax would not be charged for imports from abroad used by manufacturing units in Tamil Nadu. அதன் அடிப்படையில்தான் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. து. செல்வராஜ்: மொத்த தொகை எவ்வளவு? இந்த Low Sulphur Heavy Stock (LSHS) I.O.C.-யில் கிடைக்காதா? படிவம் 17–ஐ பயன்படுத்திக்கொள்ளலாமே?

அரசு இணைச் செயலாளர்: மின்சாரம் III Schedule-ல் exempted category-யில் வருகிறது, III Schedule-ல் வரக்கூடிய பொருள்களுக்கு படிவம் 17 கொடுக்க முடியாது. வரி விதிக்கப்படும் பொருள்களுக்கு மட்டுமே படிவம் 17 கொடுக்க முடியும். நுழைவு வரி 16 சதவிகிதம் போட்டால் ரூ.48.46 கோடி வருகிறது, வரி 3 சதவிகிதம் என்றால் ரூ.10.96 கோடி. மொத்த உற்பத்தி மதிப்பு ரூ.365 கோடி ஆகும்.

திரு. து. செல்வராஜ்: மின்சார வாரியம் பணம் கொடுத்து வாங்கிறது. அப்படியிருக்கும்போது நாம் ஏன் வரி விதிக்கக்கூடாது?

அரசு இணைச் செயலாளர்: நுழைவு வரி விதித்தால் வாங்கும் மின்சாரத்தின் விலை அதிகமாகிவிடும்.

The Committee, then, decided not to recommend any modification.

MEMORANDUM No. 4/2006-2007

Sub : Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959
(G.O.Ms.No.53/CT (B2) Department, dated 28-4-2005)

*****

Deputy Secretary stated that in exercise of the powers conferred under Section 17 (1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act 1 of 1959) the Government had issued orders exempting Tvl. Viswakarma Traditional Goldsmith Industrial Co-operative society from payment of tax on the sale of Gold Jewellery for a period of one year from 28-4-2005.

தலைவர்: இந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு வரிச் சலுகை வழங்க வேண்டிய காரணம் என்ன?

அரசு இணைச் செயலாளர்: கோவையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு பிறகு அங்குள்ள பொற்கொல்லர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டும், ஏற்றுமதிச் சந்தையில் அவர்களுக்கு உள்ள அனுபவத்தை பயன்படுத்திக் கொள்ளவும் 2002–03 ஆம் ஆண்டில் புதிய திட்டமாக (new scheme) அரசின் பங்குத்தொகையாக ரூ.5 இலட்சமும் உறுப்பினர்களின் பங்காக ரூ.4.22 இலட்சமும் செலுத்தப்பட்டு சங்கம் அமைக்கப்பட்டது. அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு வரிச் சலுகை வழங்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No.13/2006-2007

Sub: Notifications issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959.

(G.O. Ms. No. 87, Commercial Taxes (B2) Department, dated 29-7-2003)

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) Government had issued the notification exempting the tax payable under the said Act by any dealer on the sale of building materials listed out in Appendix - II to this notification to Tvl. Mata Amritanandamayi, Math, 134-B, Arcot Road, Virugambakkam, Chennai-92 for construction of 2500 houses to the Tsunami affected victims in Chennai, Cuddalore, Nagapattinam and Kanniyakumari Districts of Tamil Nadu subject to filing of certificate obtained in the Form in Appendix - I to this notification.

அரசு துணைச் செயலாளர்: சுனாமியால் பாதிக்கப்பட்ட சென்னை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில் 2500 வீடுகள் கட்டுவதற்காக அந்நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருள்களின்மீது வரிச் சலுகை அளிக்கப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 19 /2006-2007

Sub : Notifications issued under Tamil Nadu Tax on Entry of Motor Vehicles into Local Areas Act, 1990.
(G.O.Ms. No. 26, Commercial Taxes (C2) Department, Dated 17-3-2005)

Deputy Secretary stated that in exercise of the powers conferred under Section 18 of the Tamil Nadu Tax on Entry of Motor Vehicles into Local Areas Act, 1990 (Tamil Nadu Act 13 of 1990) the Government had issued amendments to notification No.SRO-A-7(a) 97 published Part III Section 1 (a) of the *Tamil Nadu Government Gazette* Extraordinary dated 13th January 1997.

He further stated that the Department had acted upon the recommendations of the Committee contained in Item No.4 of Part II of the Twentieth Report (XI Assembly).

The Committee decided to record its appreciation that the Government had acted on its recommendation.

MEMORANDUM No. 20 /2006-2007

Sub : Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).
(G.O.Ms. No. 80, Commercial Taxes Department, Dated 6-7-2005)
(G.O. Ms. No. 72, Commercial Taxes Department, Dated 3-6-2005)

****

No modification was recommended.

G.O. Ms. No. 72, Commercial Taxes (B2) Department, dated 23-6-2005

No modification was recommended.

PROCEEDINGS OF THE COMMITTEE ON DELEGATED LEGISLATION
WEDNESDAY, THE 22nd NOVEMBER 2006

The Committee on Delegated Legislation met at 10-30 a.m. on Wednesday, the 22nd November 2006 in the Conference Hall, Legislators' Residential Quarters, Chennai-600 002.

The following were present:

CHAIRMAN

Thiru. R. Rajendran

MEMBERS

Thiru. V.S. Babu

Thiru. K. Murugavel

Thiru. T. Mahesh Krishnasamy

Thiru. D. Selvaraj

Thiru. T.A. Meganathan

Thiru. G. John Joseph

SECRETARIAT

Thiru. A.M.P. Jamaludeen .. Deputy Secretary

Tmt. Janahee, Joint Secretary to Government, Law Department, was also present.

The Committee took up for consideration the following Memoranda:—

The following officers of Home Department were present to assist the Committee in its deliberations:

1. Thiru U. Sankaran,
   Deputy Secretary to Government,
   Home Department, Chennai-9.
2. Thiru C. Prakasam,
   Under Secretary to Government,
   Home Department, Chennai-9.
3. Thiru N. Sivalingam,
   Deputy Transport Commissioner.

The deliberations held as under:

MEMORANDUM No. 5/2006-2007

Sub : Notification issued under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)
(G.O.Ms.No.178, Home (Tr.III) Department, dt. 2-3-2005)

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 20(1) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (T.N. Act 13 of 1974) Government had issued orders reducing the rate of tax payable in respect of Mini bus bearing registration No.TN 25 A 0238 plying in the route Polur to Amirthi and in respect of Mini- bus bearing registration No.TN 29 N 0011 plying in the route Amirthi to Polur in Tiruvannamalai District to Rs.40/- (Rupees forty only) per seat per quarter with effect from 1-1-1997 with a condition that the tax to be collected for 25 seats per Mini-bus.

Section 10-A of the Act empowered that the Government, may, by notification from time to time levy either prospectively or retrospectively on the tax mentioned in Section 3, a sur-charge on all class or stage carriages.

Deputy Secretary (Assembly) further stated that the Government, had also issued orders levying a sur-charge at the rate of Rs.10/- (Rupees Ten only) per seat per quarter on the tax payable on those Vehicles with effect from 1-1-1997.

தலைவர்: இரண்டு தனியார் மினிப் பேருந்துகளுக்கு வரிக் குறைப்பு செய்திருக்கின்றீர்கள். ஆனால் இந்த வரிக் குறைப்பு செய்யப்பட்டதற்கான காரணம் என்ன என்ற விவரம் துறை வெளியிட்ட அறிவிக்கையில் இல்லை. என்ன காரணத்திற்காக வரிக் குறைப்பு செய்யப்பட்டது?

அரசு துணைச் செயலாளர்: ரேணுகாம்பாள் மினி பஸ் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு ஏற்கெனவே 1996–ல் 2 மினிப் பேருந்துகளுக்கு exemption கொடுத்து இருக்கிறார்கள். தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டம், பிரிவு 20–ன்கீழ் அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது. அதன்கீழ் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டு வண்டிகளை replace செய்கிறபோது அதேமாதிரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

தலைவர்: எவ்வளவோ மினிப் பேருந்துகள் இருந்தும் இந்த இரண்டு மினிப் பேருந்துகளுக்கு சலுகை கொடுக்க ஏதாவது சிறப்புக் காரணம் இருக்கிறதா? இவர்கள் பொதுச் சேவை செய்கின்றவர்களா?

அரசு துணைச் செயலாளர்: மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் வண்டியை இயக்குவதாகவும், மலைப் பகுதிச் சாலை என்பதாலும், சாலைகள் மிகவும் மோசமாக இருப்பதால் அதிக டீசல் தேவைப்படும் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, இந்த மினிப் பேருந்துகள் மலைவாழ் மக்கள் நலன் கருதி இயக்கப்படுவதால் இவர்களுக்கு அரசு சலுகை கொடுத்திருக்கிறது.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: வேறு எந்த மாவட்டத்திலாவது மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் வண்டியை இயக்குவதற்காக சலுகை வழங்கப்பட்டிருக்கிறதா?

அரசு துணைச் செயலாளர்: அவர்கள் விண்ணப்பித்தால் பரிசீலித்து சலுகை வழங்குவோம். மலைப் பகுதிகளில் unserved sector-ல் இயக்கினால் சலுகை கொடுக்கிறோம். ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிகளில் செல்லும் பேருந்துகளுக்கும் சலுகைகள் கொடுக்கிறோம்.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): Requisition வந்தால் அதை பரிசீலித்து சலுகை வழங்குவோம் என்று சொல்கிறார்கள். ஒரு தனியார் மினி பேருந்துக்கு சலுகை வழங்கியிருக்கிறார்கள் அரசு போக்குவரத்து கழகப் பேருந்து அல்ல.

தலைவர்: Taxation Act-ல் rules இருக்கிறதா?

அரசு துணைச் செயலாளர்: Motor Vehicles Act-தான் இருக்கிறது, rules இல்லை.

தலைவர்: எந்த அளவு வரை சலுகைகள் கொடுக்கப்படுகின்றன?

அரசு துணைச் செயலாளர்: மோட்டார் வாகன சட்டப் பிரிவு 20–ஐப் பயன்படுத்தி அரசு சலுகை அளிக்கிறது. தனியார் வாகனங்களுக்கு ஒரு இருக்கைக்கு ஒரு காலாண்டிற்கு ரூ.275/– வசூல் செய்யப்படுகிறது. மாநில அரசு போக்குவரத்து நிறுவன வாகனங்களுக்கு ரூ.60/– அல்லது ரூ.80/– வரை சலுகை அளிக்கப்பட்டு வசூல் செய்யப்படுகிறது.

தலைவர்: சரி. ஆனால், துறையினால் வெளியிடப்பட்டிருக்கின்ற அறிவிக்கையில், blanket exemption கொடுத்த மாதிரி இருக்கிறது. காரணம் எதுவும் இல்லை. ஏனென்றால் காரணம் ஏதுமின்றி சலுகை கொடுக்கப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சந்தேகம் வந்துவிடும். அதனால், அறிவிக்கைகள் மிகத் தெளிவாகவும் மிகுந்த விளக்கத்துடனும் வெளியிடப்பட வேண்டும். மேலும் இம்மாதிரி கொடுப்பதற்கு ஏதாவது guidelines அல்லது norms இருக்கின்றதா?

அரசு துணைச் செயலாளர்: Preamble-ல் Part II of the Gazette-ல் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. தவறுதான். Guidelines என்று பொதுவாக இல்லை. ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கும், சாரிட்டபிள் டிரஸ்ட் போன்ற நிறுவனங்களின் வண்டிகளுக்கும் கொடுக்கப்படுகிறது.

தலைவர்: உங்கள் துறையினால் வெளியிடப்பட்டிருக்கின்ற அறிவிக்கைகளில் Explanatory Note என்று சொல்லப்படுகின்ற விளக்கக் குறிப்பு வைக்கப்படவில்லை. விளக்கக் குறிப்பு மிகவும் அவசியம். இந்த விளக்கக் குறிப்பு அறிவிக்கையின் ஒரு பகுதியாக இல்லாவிட்டாலும்கூட, it is intended to indicate its general purport.

அரசு துணைச் செயலாளர்: Draft Notification issue செய்து confirm செய்ய வேண்டும். அதில் explanatory note கொடுக்கிறோம்.

தலைவர்: This notification is placed before the House for the information of the Members. What is the purpose of giving explanatory note to the public? Notification is only for the Members. Instead of admitting the mistake you are trying to justify your action. The Committee is not satisfied with your reply.

JOINT SECRETARY TO GOVERNMENT (LAW): The explanatory note is only for facilitating the Members to understand the purpose for which the Notification is issued.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 6/2006-2007

Sub : Notification issued under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)
(G.O.Ms.No.247, Home (Tr.I) Department, dt. 29-3-2005)

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 20 (2) of the Tamil Nadu Motor Vehicle Taxation Act, 1974 the Government in the said notifications had issued orders cancelling the exemption given in the rate of tax in respect of the vehicle No.TN.01 A 4449 belonging to His Highness the Prince of Arcot, Chennai and exemption from the payment of tax in respect of the Motor Vehicle bearing Registration No.TN. 07 AK 0786 (TOYOTA Corolla 2005 model) in the personal use of His Highness the Prince of Arcot.

அரசு துணைச் செயலாளர்: Revolving light special category-ஆக அவருக்குக் கொடுத்திருக்கிறோம். அவரை honour செய்ய வேண்டும் என்பதற்காக கொடுத்திருக்கிறோம். அதனால் பழைய வண்டிக்கு இருந்த சலுகையை இரத்து செய்துவிட்டு, புதிய வண்டிக்கு கொடுத்திருக்கிறோம்.

தலைவர்: இளவரசர் என்பதற்காக கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் கொடுத்த அறிவிக்கையில் விளக்கக் குறிப்பு இடம்பெறவில்லையே?

அரசு துணைச் செயலாளர்: இனிமேல் கொடுத்துவிடுகிறோம்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 9/2006-2007

Sub : Notification issued under Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974.
(G.O.Ms.No.843, Home (Transport-I) Department, Dated 22-9-2005)

******

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 20(1) of Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974) the Government had issued orders reducing the tax payable by the Metropolitan Transport Corporation (Chennai) Limited, Chennai, in respect of their stage carriages operated on the routes namely 1. Redhills to Poochi Athipedu, 2. Vallalar Nagar to Poochi Athipedu and 3. High Court to Poochi Athipedu from Rs.275.00 per seat per quarter to Rs.60/- per seat per quarter up to the 31st March, 2003 and from Rs.325/- per seat per quarter to Rs.80/- per seat per quarter with effect from 1st April, 2003.

தலைவர்: இந்தச் சலுகை வழங்கப்பட்டதற்கான காரணம் என்ன?

அரசு துணைச் செயலாளர்: City limit-ஐ தாண்டி mofusil area-ல் பேருந்து இயக்கப்பட்டால் அதற்கு கூடுதல் வரி செலுத்த வேண்டிவரும். அவர்கள் mofusil area-ல் செல்லும் தூரத்தையும் city limit-ஆக சேர்த்துக் கொண்டு சலுகை வழங்கவேண்டும் என்று அவர்கள் விண்ணப்பித்ததால் சலுகை வழங்கப்பட்டது.

தலைவர்: Mofusil area என்பதால் அதில் சலுகையா? மற்ற மாநகராட்சிகளிலும் இத்தகைய சலுகைகள் உண்டா?

அரசு துணைச் செயலாளர்: சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகளிலும் 30 அல்லது 35 கி.மீ அதிகப்படுத்தியிருக்கிறோம். 30 கி.மீ. விரிவுபடுத்தி ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது. இப்போது 5 கி.மீ. விரிவுபடுத்தி அறிவிக்கை வெளியிட இருக்கிறோம்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 11/2006-2007

Sub : Notifications issued under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)
(G.O.Ms.No.841, Home (Tr.I) Department, dated 22-9-2005, G.O.Ms.No.923, Home (Tr.I) Department, dated 29-9-2005)

****

No modification was recommended.

MEMORANDUM No. 12/2006-2007

Sub : Notifications issued under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)
(G.O.1D No.964, Home (Tr. I) Department, dated 7-10-2006)

****

Deputy Secretary stated that in exercise of the powers conferred under Section 20(1) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act 1974 (T.N. Act 13 of 1974) the Government had issued orders reducing the rate of tax to 50% in respect of the Ambulance Vehicle bearing registration

No TN 20 AZ 2540 owned by the Missionaries of Charity, Ennore, Chennai-52 for a period of five years or till the said vehicle is owned by the said Institution and the vehicle used for philanthropic purposes associated with the said Institution without letting it for hire or reward. He also stated that the Government had also cancelled the Notification issued earlier by the Home Department.

தலைவர்: 50 சதவிகிதம் வரிச் சலுகை தருவதற்கான காரணம் என்ன?

அரசு துணைச் செயலாளர்: Ambulance என்பதால் கொடுத்திருக்கிறார்கள். பழைய வண்டியை condemn செய்த காரணத்தால் புது வண்டிக்கு கொடுத்திருக்கிறார்கள்.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): ஏற்கெனவே இருந்த வண்டியை condemn செய்த காரணத்தால் அதற்கு பதிலாக புதிய வண்டிக்கு கொடுத்திருக்கிறீர்கள். அப்படியென்றால் Prince of Arcot நிகழ்வில் செய்தது போல் முதலில் இரத்து செய்து அறிவிக்கை வெளியிட்ட பின்புதானே புதிய வண்டிக்கான சலுகை பற்றிய அறிவிக்கை வெளியிட்டிருக்க வேண்டும். இந்த அறிவிக்கையிலும் விளக்கக் குறிப்பு இடம்பெறவில்லை.

அரசு துணைச் செயலாளர்: இனிமேல் விளக்கக் குறிப்பு கொடுத்து விடுகிறோம்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 15/2006-2007

Sub. : Notification issued under Tamil Nadu Motor Vehicles Taxation Act,1974 (Tamil Nadu Act 13 of 1974)
(G.O. Ms. No. 836/Home Department, Dt. 21-9-2005)

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 20(1) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (T.N.Act 13 of 1974) the Government had issued orders exempting from payment of life time tax for the Honda city A/C car having the chassis No.MA KGD 851G 5N 221985 and the Engine No. L15A 30055698 owned by the Member Secretary, Tamil Nadu State Legal Authority, Chennai.

The Committee observed that though the Government was empowered to issue notifications exempting the rate of Tax under Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974, such powers might be exercised on reasonable grounds.

CHAIRMAN: The Committee would like to know the reasons why this type of concession was given to an individual, i.e. Member Secretary, Tamil Nadu State Legal Authority.

அரசு துணைச் செயலாளர்: அந்த கார் வாங்குவதற்கான பணம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதால் வரிச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): அப்படியென்றால் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டு வாங்கப்படும் அனைத்து வண்டிகளுக்கும் வரிச் சலுகை கொடுக்கப்படுகிறதா?

அரசு துணைச் செயலாளர்: Legal assistance to poor— ஏழை மக்களுக்கான சட்ட உதவி அளிக்கும் மையத்தின் உறுப்பினர்–செயலர் என்பதால் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

தலைவர்: மாநில அளவில் 'மாநில சட்ட உதவி ஆணையம் இருக்கிறது. அப்படியென்றால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அவருக்குக்கீழ் இயங்கும் subordinates–களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறதா? The Committee feels that this provision should be sparingly used. But in the instant case it has been used for giving concession to an individual, i.e. Member-Secretary.

DEPUTY SECRETARY (ASSEMBLY): The Committee would like to know the reasons why this concession was given? Is there any precedent? இந்த மாதிரி கடந்த காலங்களில் கொடுத்திருக்கிறோம் என்று வேறு நிகழ்வுகள் இருந்தால் அதைக் கூறுங்கள்.

தலைவர்: அப்படியென்றால் உயர்நீதிமன்றத்தில் உள்ள அனைத்து நீதிபதிகளுக்கும் சலுகை அளிக்கப்படுகிறதா?

அரசு துணைச் செயலாளர்: அவர் எழுத்து மூலமாக அமைச்சரிடமிருந்து ஆணை பெற்றுத் தந்ததால் அவருக்கு சலுகை வழங்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறோம்.

CHAIRMAN: The Committee is not satisfied with the explanation given. We feel that such powers should be used sparingly and should be exercised on reasonable grounds. This is not a reasonable ground.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): அறிவிக்கைகள் சட்டமன்றத்தில் வைக்கப்படுவதால் அவை self contained–ஆக இருக்க வேண்டும். தவறு இல்லாமல் இருக்க வேண்டும். உங்கள் துறையினால் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கைகளில் விளக்கக் குறிப்புகள் இடம்பெறவில்லை. நீங்கள் அரசாணையில் விவரங்களை தெரிவித்திருக்கலாம், ஆனால் அவை உறுப்பினர்களுக்குத் தெரிவதில்லை.

அரசு துணைச் செயலாளர்: விளக்கக்குறிப்பு கொடுத்து விடுகிறோம்.

After some discussion, the Committee decided to seek the reasons or grounds which necessitated granting exemption to the person referred to in the notification from the Home Department.

PROCEEDINGS OF THE MEETING OF THE COMMITTEE ON DELEGATED LEGISLATION

THURSDAY, THE 15th MARCH 2007

The Committee on Delegated Legislation met at 11-30 a.m. on Thursday, the 15th March 2007 in the Conference Hall, Bharathi Guest House, Kanniyakumari.

The following were present:

CHAIRMAN

Thiru. R. Rajendran

MEMBERS

Thiru P. Veldurai

Thiru. T.A. Meganathan

Thiru. G. John Joseph

SECRETARIAT

Thiru. A.M.P. Jamaludeen .. Deputy Secretary

Thiru Baskaran, Deputy Secretary to Government, Law Department, was also present.

At the outset, Deputy Secretary (Assembly) welcomed the Chairman and Members. He stated that the Committee was to consider five memoranda during the meeting and that the officials of the Kanniyakumari District belonging to various Departments have come before the Committee for giving explanation to the Committee relating to the subjects under consideration by the Committee.

The following officials introduced themselves before the Committee:

TRANSPORT DEPARTMENT

1. Thiru Natarajan,
   Deputy Commissioner,
   Transport Department,
   Chennai 600 005.
2. Thiru Ramamoorthy,
   Regional Transport Officer,
   Nagercoil.

COMMERCIAL TAXES DEPARTMENT

1. Thiru Ganesan,
   Deputy Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai 600 009.
2. Thiru Neelamegan,
   Under Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai 600 009.
3. Thiru Balusamy,
   Deputy Commissioner of Commercial Taxes,
   Tirunelveli.
4. Thiru T.C. Desikan,
   Assistant Commissioner of Commercial Taxes,
   Tirunelveli.

REVENUE DEPARTMENT

1. Thiru Thanukrishnan,
   Revenue Inspector (Tsunami Relief),
   Kanniyakumari District.

The Committee first took up for consideration the following Memoranda:

MEMORANDUM No. 21/2006-2007

Sub. : Notifications Issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).
G.O. Ms. No. 85, Commercial Taxes (D2) Department, dated 22-7-2005.

Deputy Secretary (Assembly) stated that Section 17(3) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 empowered the Government to cancel or vary any notification issued under Sub Section (1) and Sub Section 1 of Section 17 empowered the Government to issue notifications with prospective or retrospective exemption from payment of Tax or reduction in the rate of tax under the said Act on the sale or purchase of any specified class of goods at all point or at a specified point or points in the series of sales.

He also stated that in exercise of the powers mentioned above the Government in the first notification had issued orders canceling its earlier notification No.II(1)/CT/7(b)/2005, dated 7.2.2005.

In exercise of the powers above, the Government in the second notification had issued orders exempting the tax payable under the said Act by Tvl. Tamil Nadu Cement Corporation Limited on the Sale of Cement, Asbestos Cement sheets flat or corrugated, Cement articles, Asbestos articles, Asbestos Cement articles and Stoneware Pipes for relief works to Tsunami affected victims in 13 coastal districts.

தலைவர்: எவ்வளவு தொகைக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது?

சார்புச் செயலாளர், வணிக வரிகள் துறை: சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்து அறிவிக்கை வெளியிடப்பட்டது. அச்சமயத்தில் கற்குழாய் பைப் அந்த அறிவிக்கையில் இடம்பெறவில்லை. எனவே, மேற்கண்ட அறிக்கையில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படும் கற்குழாய் பைப்புக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்து திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 13 மாவட்டங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டன. வரி விலக்கு குறித்த விவரங்களை இம்மாவட்டங்களிலிருந்து கேட்டிருக்கிறோம். முழுமையான விவரங்கள் இன்னும் பெறப்படவில்லை. விவரங்கள் கிடைத்தவுடன் மொத்த வரிவிலக்குத் தொகை தெரிய வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: அரசு அளித்த விற்பனை வரிச் சலுகையின் பலன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கவில்லை. தொண்டு நிறுவனங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்கள் சுனாமி நிவாரணம் குறித்த முறையான கணக்குகளைப் பராமரிக்கவில்லை. பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. இறுதிசெய்யப்பட்ட கணக்கு இதுவரையில் எந்த மாவட்டத்திலிருந்தும் வைக்கப்படவில்லை.

தலைவர்: கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமி நிவாரணப் பணிகளை யார் மேற்கொள்கிறார்கள்?

சார்புச் செயலாளர், வணிக வரிகள் துறை: District Revenue Officer (Relief and Rehabilitation) என்ற ஒரு அலுவலரின் மேற்பார்வையில் சுனாமி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் இவர் பணியாற்றுகிறார்.

வருவாய் ஆய்வாளர்: District Revenue Officer (Relief and Rehabilitation) நிலத்தைக் கையகப்படுத்தி தொண்டு நிறுவனங்களிடம் கொடுத்துவிடுகிறார்.

திரு. பா. வேல்துரை: சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள்தான் உண்மையான நிலவரத்தைச் சொல்ல முடியும் என்று நினைக்கின்றேன்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: தொண்டு நிறுவனங்கள் financially sound-ஆகத்தான் இருக்கின்றன.

துணை ஆணையாளர், வணிக வரிகள்: அரசு 32 தொண்டு நிறுவனங்களை அங்கீகரித்து இருக்கிறது. அந்த தொண்டு நிறுவனங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கின்றன. இந்தத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற சிமெண்ட் மற்றும் இதர பொருட்களுக்கு வரி விலக்குச் சலுகை அரசாங்கத்தால் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: சுனாமி நிதியை எப்படிப் பயன்படுத்தலாம் என்று இந்தத் தொண்டு நிறுவனங்கள் இப்போதும் யோசித்துக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு அவர்களிடம் போதுமான நிதி இருக்கக்கூடிய நிலையில் இந்தச் சலுகை தேவையா என்பதுதான் கேள்வி.

The Committee, after some discussion decided not to recommend any modification.

MEMORANDUM No. 22/2006-2007

Sub. : Notifications Issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act 1 of 1959) and Tamil Nadu Additional Sales Tax Act, 1970 (T.N. Act 14 of 1970).
(G.O. Ms. No. 101, Commercial Taxes (B2) Department, dated 27-9-2005)

No modification was recommended.

MEMORANDUM No. 23/2006-2007

Sub. : Notifications Issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959.
(G.O. Ms. No. 36, Commercial Taxes (B2) Department, dated 31-3-2005)

No modification was recommended.

(G.O. Ms. No. 38, Commercial Taxes (B2) Department, dated 1-4-2005)

Deputy Secretary, Assembly stated that Section 17 (1) of Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government to make an exemption or reduction in rate, whether prospectively or retrospectively in respect of any tax payable under this Act. He also stated that the Government had issued the above notification giving exemption in respect of tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act, 1959 on the sale of New Wooden Catamaran, New Mechanised Boat including fibre glass boats fitted with OBM, etc. to rehabilitate the Tsunami affected persons in 13 coastal districts of the State as identified in G.O.Ms.No.581, Revenue (NC-III) Department, dated 31-12-2004.

தலைவர்: எவ்வளவு காலத்திற்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை டீலர்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது?

துணை ஆணையாளர், வணிக வரிகள்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 1–4–2005 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் வகையில் அரசு, சுனாமியால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இந்த வரிச் சலுகையை அளித்திருக்கிறது. இந்த வரிச் சலுகை ஒரு வருட காலத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குழித்துறையில் இயங்கி வருகின்ற South Indian Federation of Fishermen Society என்ற இணையம் 8 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்துள்ளது. இதனுடைய கிளை நிலையம் தரங்கம்பாடியில் உள்ளது. தக்கலை மற்றும் முட்டத்தில் உள்ள Boat Building Centre என்ற இரண்டு பதிவுபெற்ற டீலர்கள் 2 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்துள்ளார்கள். இவர்களுக்கு கிட்டத்தட்ட ரூ. 27,14,550/– அளவுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: சுனாமி நிவாரணத்திற்காகப் பொருட்கள் வாங்குவதற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பயனை அனுபவிப்பது தொண்டு நிறுவனங்கள்தான். உண்மையான பலன் பயனாளிகளுக்குக் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன். தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பணம் வருகிறது. இப்போது சுனாமி நிதியை என்ன செய்யலாம் என்று திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அவர்களிடம் சர்ப்ளஸ் பண்ட்ஸ் இருக்கிறது. இந்நிலையில் அந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு இந்தச் சலுகை தேவையா என்பதுதான் கேள்வியாக இருக்கிறது.

வருவாய் ஆய்வாளர்: கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிவு பெற்ற 12 தொண்டு நிறுவனங்கள் மூலம் 2592 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவற்றில் 1977 வீடுகள் கட்ட அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்துள்ளது. மீனவர்கள் வாழ்ந்து வந்த அதே இடத்தில் 615 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 90 சதவிகித வீடுகள் மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. சுனாமி நிவாரணப் பணிகளுக்காக 31.52 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும், 87.73 ஏக்கர் பட்டா நிலமும் கையகப்படுத்தப்பட்டது. நிலத்தின் மொத்த மதிப்பு ரூ.7,53,09,784/– ஆகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக தொண்டு நிறுவனங்களால் வாங்கப்படும் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த வரி விலக்குச் சலுகை 31–3–2006 வரை கொடுக்கப்பட்டிருந்தது. எனவே அரசாணையின்படி தொண்டு நிறுவனங்கள் வரி விலக்கு கோரியதன் அடிப்படையில் இச்சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கணக்குகளை ஆய்வு செய்வதற்கு நமக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை.

திரு. பா. வேல்துரை: வரிச் சலுகையின் பலன் பயனாளிகளைச் சென்று சேர வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

உதவி ஆணையாளர், வணிக வரிகள்: வரி விலக்குக் கொடுத்தால் கட்டடம் கட்டும் செலவு கொஞ்சம் குறையும் என்று அரசாங்கம் இச்சலுகையை அளித்தது.

வருவாய் ஆய்வாளர்: கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பொறியாளர்கள் நல்ல முறையில் வேலை செய்திருக்கிறார்கள். நிலம் கொடுப்பது, குடிதண்ணீர் இணைப்புக் கொடுப்பது மற்றும் மின்சார இணைப்பு கொடுப்பது போன்ற அடிப்படை வசதிகளை நாங்கள் செய்து கொடுத்திருக்கிறோம். மேலும், அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து திரு. சாந்தகுமார் அவர்கள் தலைமையில் ஒரு குழு soil test, material test எல்லாம் செய்திருக்கிறது. அவர்களிடமிருந்து remarks எதுவும் வரவில்லை.

தலைவர்: சுனாமி நிதி சரியாகக் கையாளப்படவில்லை என்று நிறைய புகார்கள் வந்திருக்கின்றன.

வருவாய் ஆய்வாளர்: தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட சுனாமி நிதியை ஆடிட் செய்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை.

The Committee, after some discussion decided not to recommend any modification.

MEMORANDUM No. 24/2006-2007

Sub. : Notifications Issued under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974. (T.N. Act 13 of 1974)
(G.O. Ms. No. 461, Home (Tr.I) Department, dated 8-6-2005),

———

Deputy Secretary (Assembly) stated that section 20(1) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act 1974 (T.N. Act 13 of 1974) empowered the Government to make an exemption or reduction in the rate or other modification in regard to the tax payable by any person or class of persons or in respect of any Motor Vehicle or Class of Motor Vehicles or Motor Vehicles running in any particular area, and cancel or vary such exemption, reduction or other modification.

He added that in exercise of the powers conferred above the Government had issued orders reducing the rate of green tax payable under class 2 of the fourth schedule to the said Act in respect of the auto rickshaws which have completed 7 (seven) years from the date of their registration, having contract carriage permit and carries passengers for hire or reward, from Rs.500/- (Rupees five hundred only) (per annum) to Rs.200/- (Rupees two hundred only) (per annum)

தலைவர்: தற்போதைய நிலையில், ஆட்டோ ரிக்ஷாக்கள் செலுத்த வேண்டிய பசுமை வரி எந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு குறைக்கப்பட்டது?

துணை ஆணையாளர், போக்குவரத்து: தமிழ்நாடு முழுவதும், பல்வேறு ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றன. அவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலித்து பசுமை வரி குறைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதற்கேற்ப பதிவு செய்து 7 ஆண்டுகள் முடிவுற்ற ஆட்டோ ரிக்ஷாக்கள் பசுமை வரியாகச் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.500/–ஐ ரூ.200/–ஆகக் குறைத்து அறிவிக்கை வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் பதிவுபெற்று ஏழு ஆண்டுகள் முடிவுற்ற ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 20,000 ஆகும். இந்த வண்டிகளுக்கு பசுமை வரியைக் குறைத்ததன் மூலம் ரூ.2.40 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தப் பசுமை வரி என்பது 5 வருடங்களுக்கு ஒரு முறை கட்ட வேண்டிய ஒன்றாகும். பல அளவுகளில் வாகனங்களுக்கு பசுமை வரி விதிக்கப்படுகிறது. Non-transport carriages என்று சொல்லப்படுகின்ற வாகனங்களுக்கு ரூ.1,000/– பசுமை வரியாக விதிக்கப்படுகிறது. அத்தொகை குறைக்கப்படவில்லை.

தலைவர்: வண்டிகள் வெளியிடுகின்ற புகையின் தன்மையைக் கண்டறிவதற்கு emission norms ஏதாவது வைத்திருக்கிறீர்களா ?

துணை ஆணையாளர், போக்குவரத்து: தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் Emission Centres இருக்கின்றன. வாகனங்கள் வெளியிடுகின்ற புகை அளவு குறித்து இம்மையங்களிலிருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் மூலம் இயக்கப்படுகின்ற வாகனங்களுக்கென்று தனித்தனியான அளவீடுகளை வைத்திருக்கிறார்கள். அந்த அளவீட்டுக்குள் இருந்தால்தான் சான்றிதழ் வழங்கப்படும். வாகனப் புகை சோதனைச் சான்றிதழ் இல்லாத வாகனங்களுக்கான எப்.சி. கேன்சல் செய்யப்படுகின்றது. இந்தச் சான்றிதழை 6 மாதத்திற்கு ஒருமுறை பெற வேண்டும்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: சில புகை சோதனை மையங்களில் வாகனங்களின் நம்பர் பிளேட்டை மட்டும் பார்த்துவிட்டு சான்றிதழ்கள் கொடுக்கப்படுகின்றன என்று புகார்கள் வருகின்றன.

துணை ஆணையாளர், போக்குவரத்து: இந்தச் சோதனை மையங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. வாகனம் இயக்கப்பட்டு அதிலிருந்து புகை வந்தால்தான் print out வரும் என்கிற முறையில் இரண்டையும் synchronize செய்து வைத்திருக்கின்றோம். அதனால் இம்மாதிரி தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 25/2006-2007

Sub. : Amendments to Tamil Nadu Motor Vehicles Rules 1989.
(G.O. Ms. No. 182, Home (Transport-III) Department, Dated 13-2-2004)

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 96 of the Motor Vehicle Act 1988 (Central Act 59 of 1988) the Government had issued the above notification amending Rules 306, 307 and 319 of the Tamil Nadu Motor Vehicles Rules 1989.

தலைவர்: விதி 306 (Seating Room)-ல் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இருக்கைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா?

துணை ஆணையாளர், போக்குவரத்து : Public Service vehicle என்று சொல்லப்படுகின்ற Stage carriages வாகனங்களில் Ordinary Services, Mofussil Services, City Services என்று பல வகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறுவிதமான இருக்கை அமைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு இருக்கைக்கும் இடையில் உள்ள இடைவெளி குறித்துத்தான் மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. நகர்ப் பகுதிப் பேருந்துகளில் இருக்கை எண்ணிக்கை 40 ஆகவும், நீண்ட தூரம் செல்லுகின்ற பேருந்துகளில் இருக்கை எண்ணிக்கை 45 ஆகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தலைவர்: விதி 319–ல் பேருந்துகளில் entrance and exit அமைப்பது பற்றி திருத்தம் வெளியிடப்பட்டிருக்கிறது. அவசரகால வழி (Emergency exit) குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. Emergency exit இப்போதுதான் சேர்த்திருக்கிறீர்களா?

துணை ஆணையாளர், போக்குவரத்து: மேற்கண்ட விதியில் express service stage carriages and contract carriages (omni buses)-களுக்கு கதவு அமைப்பது குறித்து an Entrance-cum-exit on the left side of the vehicle either in the front or in the rear என்று இருக்கிறது. தற்போது, புதிதாக விரைவு வண்டிகளில் ஒரு அவசரகால வழி அமைப்பதற்காக an emergency exit on the off side of the vehicle at the rear window screen of the vehicle என்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

தலைவர்: இம்மாதிரி அவசரகால வழி இல்லாத வண்டிகளுக்கு ஏதாவது பைன் போடுகிறீர்களா?

துணை ஆணையாளர், போக்குவரத்து: வண்டி கூடுகட்டும்போதே இதைச் செய்யவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. வண்டிகள் எப்.சி.–க்கு வரும்போது இவ்வசதி செய்யப்பட்டிருந்தால்தான் எப்.சி. கொடுக்கப்படுகிறது.

திரு. த.அ. மேகநாதன்: இரயில் வண்டிகளில் அவசரகால வழி என்று எழுதியிருப்பார்கள். அதுபோல பேருந்துகளில் எழுதப்பட்டிருக்கிறதா?

துணை ஆணையாளர், போக்குவரத்து: பேருந்துகளிலும் எழுதப்பட்டிருக்கிறது.

திரு. ஞா. ஜான் ஜோசப்: அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் இவ்வாறு எழுதப்படவில்லை.

வட்டாரப் போக்குவரத்து அலுவலர்: 120 கிலோமீட்டர் தூரத்திற்குமேல் போகின்ற பேருந்துகள் அனைத்திலும் கண்டிப்பாக இவ்வசதியைச் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறோம்.

துணை ஆணையாளர், போக்குவரத்து: பழைய பேருந்துகளில் இவ்வாறு இருக்காது. புதிய பேருந்துகள் அனைத்திலும் கண்டிப்பாக அவசரகால வழி இருக்கும். மேலும், பேருந்தின் பின்பக்கத்தில் பெரிய கண்ணாடி வைக்கப்படுகின்றன. உடனே உடைந்துவிடக்கூடிய அளவுக்குத்தான் அந்தக் கண்ணாடிகள் இருக்கும். அந்த வழியாகவும் வெளியேறலாம்.

தலைவர்: அரசுப் பேருந்துகள் சிலவற்றில் உட்காரும்போது முன் இருக்கையில் கால்கள் இடிக்கின்ற நிலை இருக்கிறது. எனவே போதுமான இடைவெளி விடுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

துணை ஆணையாளர், போக்குவரத்து: இப்போது 38 செ.மீ.–க்குக் குறையாத அளவு இடைவெளி இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீண்ட தூரம் செல்லுகின்ற பேருந்துகளில் 45 செ.மீ. இடைவெளி விடச் சொல்லியிருக்கிறோம். இனிமேல் இப்பிரச்சினை இருக்காது.

The Committee after some discussion decided not to recommend any modification.

PROCEEDINGS OF THE COMMITTEE ON DELEGATED LEGISLATION

MONDAY, THE 13th AUGUST 2007

The Committee on Delegated Legislation met at 3-30 p.m. on Monday, the 13th August 2007 in the Conference Hall, Legislators' Residential Quarters (Amenity Block), Chennai-600 002.

The following were present:

CHAIRMAN

Thiru. P.N. Periyannan*

MEMBERS

Thiru. O. Subramaniam

Thiru. M. Anbazhagan

Thiru. G. Senthamizhan

Thiru. R.M. Palanisamy

---

* Proposed by Thiru. O. Subramaniam and seconded by Thiru. M. Anbazhagan, elected as Temporary Chairman.

SECRETARIAT

Thiru. V.S. Subramanian .. Additional Secretary

Tmt. Janahee, Joint Secretary to Government, Law Department, was also present.

The Committee, then, took up for consideration the following Memoranda relating to the Commercial Taxes Department:

The following officials from the Commercial Taxes Department introduced themselves before the Committee:

1. Thiru Subbarayan,
   Joint Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai 600 009.

2. Thiru K. Satchidanandam,
   Deputy Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai 600 009.

3. Thiru I. Nagarajan,
   Commercial Taxes Officer (Drafting Cell),
   O/o The Commissioner of Commercial Taxes,
   Chennai 600 005.

MEMORANDUM No. 26/2007-2008

Sub. : Notifications issued under T.N.G.S.T Act 1959
(G.O. Ms. No. 101/CT (B2), Department, dated 27-9-2005)

Additional Secretary (Assembly) stated that Section 17(1) of the T.N.G.S.T Act 1959 (TN Act 1 of 1959) empowered the Government to issue notifications with prospective or retrospective exemption from payment of tax under the said Act on the sale or purchase of any specified class of goods at all points or at a specified point or points in the series of sales by successive dealers.

He further stated that in exercise of the above powers the Government had issued orders granting exemption in respect of the sales tax, purchase tax, surcharge tax, resale tax and additional tax payable by any dealer on the sale of any goods for use in the execution of turn key projects by main/sub-Contractors who have entered into agreement with Tvl. Nokia India Pvt., Ltd., Chennai, an Unit located in Special Economic Zone in Tamil Nadu, subject to the condition that they should obtain and furnish a declaration issued by the assessing authority i.e. by Tvl. Nokia India Pvt.Ltd., once in a year in the form appended to the above notification. The notification shall come into force on the 27th September , 2005.

தலைவர்: இதைப் பற்றிய விளக்கம் சொல்லுங்கள்.

அரசு இணைச் செயலாளர்: இந்த நோக்கியா நிறுவனம் என்பது சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பகுதியில் அமைக்கப்பட்டதாகும். SEZ என்று அழைக்கப்படும் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்ட பிறகு சிவில் வேலைகள் மற்றும் பிற வேலைகள் ஆரம்பிக்கும்போது என்ன பொருட்கள் வாங்கினாலும் அவைகளுக்கு, அந்த யூனிட் முழுக்க ஏற்றுமதி யூனிட்டாக இருந்தால் வரி விலக்கு கொடுக்கப்படுகிறது. அதனால், கட்டுமானப் பொருட்கள், மூலப் பொருட்கள் போன்ற எந்தப் பொருட்கள் வாங்கினாலும் வரி விலக்குக் கொடுப்பதற்கு சட்டத்தில் புரவிஷன் இருக்கிறது. TNGST Act-ல் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் இந்த வரிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: இவர்கள் ரீ-சேல் செய்தால் என்ன நிலைமை?

அரசு இணைச் செயலாளர்: அவ்வாறு ரீ-சேல்/லோக்கல் சேல் செய்யும்போது வரி போடப்படுகிறது. இவர்கள் பொருட்கள் தயாரித்து தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியாவில் எங்கு விற்றாலும் கண்டிப்பாக வரி விதிக்கப்படும். 100 சதவிகித ஏற்றுமதி யூனிட்டுக்கு மட்டும்தான் இந்த வரிவிலக்கு பொருந்தும்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தால் மட்டும் ஏன் வரி போடுவதில்லை?

அரசு இணைச் செயலாளர்: நம்முடைய அரசமைப்புச் சட்டத்திலேயே அதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஏற்றுமதி ஆகும் பொருட்களுக்கு வரி போட்டால் அந்த நாட்டில் உள்ளவர்கள்தான் வரி கட்ட வேண்டும். நாம் இன்னொரு நாட்டு மக்கள்மீது வரி போட முடியாது. எனவேதான், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அமைக்கப்படும் யூனிட்டுகள், தங்களது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்தால் வரி விலக்கு கொடுக்கப்படுகிறது. மத்திய சட்டத்திலும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 27/2007-2008

Sub. : Notification issued under TNGST Act, 1959
(G.O. Ms. No. 85, Commercial Taxes Department, dated 22-7-2005)

Additional Secretary (Assembly) stated that Section 17(1) of Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowers the Government to issue Notification with prospective or retrospective exemption from payment of tax or reduction in the rate of tax under the said Act on the sale or purchase of any specified class of goods at all points or at a specified point or points in the series of sales and Section 17(3) of the said Act empowers the Government to cancel or vary any notification issued under Sub-Section(1) and that in exercise of the powers above the Government had issued the orders cancelling the Commercial Taxes Department Notification No. II (1) CT/7(b)/ 2005, dated 7th February, 2005 published at pages 1 to 2 of Part II Section 1 of the Tamil Nadu Government Gazette Extraordinary ,dated the 7th February, 2005.

He further stated that in the second notification, orders had been issued granting exemption in respect of the tax payable under the said Act on the sale of cement, Asbestos cement sheets, flat or corrugated cement articles, Asbestos articles, Asbestos cement articles and stoneware pipes by Tvl. Tamil Nadu Cement Corporation Ltd., for relief works to Tsunami affected victims in the 13 districts through the District Collectors, subject to filing of a declaration in the format appended to the said notification

The Committee felt that it might be appropriate for the Government to invoke sub-section (2) of Section 17 of the Act also in addition to sub-section (1) for issue of the above notification as the exemption of tax presently notified in G.O.Ms. No.85, Commercial Taxes Department, dated 22-7-2005 had been extended to the districts specified therein and also on the condition of filing of a declaration in the format appended to the notification by the District Collectors concerned.

தலைவர்: இந்த வரி விலக்கு குறித்துச் சொல்லுங்கள்.

அரசு இணைச் செயலாளர்: சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுனாமி மறுவாழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்களை தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் விற்கும்போது அவர்களுக்கு வரி விலக்கு அளித்து முதலில் 7-2-2005-ல் அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் அந்த அறிவிக்கையில், கல்நார் குழாய் பொருள் (Stoneware pipes) இடம்பெறாததால் அதையும் சேர்த்து அறிவிக்கை வெளியிட வேண்டும் என அந்த நிறுவனம் அரசைக் கோரியது. அதனால் அரசு மீண்டும் அரசாணை எண் 85-ன் மூலமாக மேற்கண்ட அறிவிக்கையை வெளியிட்டது. திருத்த அறிவிக்கை போடும்போது எல்லாப் பொருட்களையும் சேர்த்துப் போட்டோம். மேலும் சுனாமி மறுவாழ்வுப் பணிகள் நடைபெறுகின்ற 13 மாவட்டங்களுக்கு மட்டுமே இந்த அறிவிக்கை பொருந்தும்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: சுனாமி மறுவாழ்வுப் பணிகள் முடிந்த பிறகு அரசு மீண்டும் இந்த வரி விலக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமா?

அரசு இணைச் செயலாளர்: அந்த நிறுவனம் ஒரு சான்றிதழ் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்தால்தான் இந்தச் சலுகை கிடைக்கும்.

இணைச் செயலாளர் (சட்டத் துறை): The goods are purchased for Tsunami Relief Works என்று Declaration கொடுத்தால்தான் ஏற்றுக்கொள்வார்கள்.

The Committee decided to recommend that the Government might invoke sub-section (2) of Section 17 of Tamil Nadu General Sales Act, 1959 also in addition to sub-section (1) for issue of the above Notification.

MEMORANDUM No. 28/2007-2008

Sub. : Notifications issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959)

1. ***G.O.Ms.No.69 Commercial Taxes and Registration (B2) Department, dated 19-7-2006.***
2. ***G.O.Ms.No.52 Commercial Taxes and Registration (B2) Department, dated 11-6-2006.***
3. ***G.O.Ms.No.63 Commercial Taxes and Registration (B2) Department, dated 12-7-2006.***

*****

Additional Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government to make an exemption or reduction in rate, whether prospectively or retrospectively in respect of any tax payable under the Act and that accordingly, the Government had issued three notifications in the Government Orders mentioned above. He wanted the officials to clarify on the above Notifications.

1. G.O.Ms.No.69, Commercial Taxes and Registration (B2) Department, dated 19-7-2006)

அரசு இணைச் செயலாளர்: மேற்கண்ட அறிவிக்கையானது, புளு கிராஸ் இந்தியா நிறுவனம் 28–3–2005–ல் வாங்கிய ஒரு வண்டிக்கு (வேன்) அவர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரி மற்றும் மேல்வரியான மொத்தம் ரூ.66,780/–ஐ விலக்கு அளித்து வெளியிடப்பட்ட அரசாணையாகும். அந்நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை நியாயமான கோரிக்கை என்று பரிசீலனை செய்து, நிதித் துறை ஒப்புதல் வாங்கி வரி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு தனி நிகழ்வாகும்.

The Committee decided not to recommend any modification.

2. G.O.Ms.No.52 Commercial Taxes and Registration (B2) Department, dated 11-6-2006

அரசு இணைச் செயலாளர்: இந்த இரண்டாவது அறிவிக்கை, உயர்வேக டீசல் எண்ணெய் மீதான வரியை 25 சதவிகிதத்திலிருந்து 23.43 சதவிகிதமாகக் குறைத்து வெளியிடப்பட்ட அறிவிக்கையாகும். மத்திய அரசு, 6–6–2006 முதல் டீசல் விலையை ரூ.1.78 என்ற அளவிற்கு உயர்த்தியது. மாநில அரசு நுகர்வோர்மீது இந்தச் சுமையை ஏற்றக்கூடாது என்ற கோரிக்கை எழுந்ததின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். அதனால், 1.57 சதவிகிதம் அளவிற்கு வரி குறைப்பு செய்யப்பட்டது. அப்படிக் குறைத்ததால்தான் பழைய விற்பனை விலை அப்படியே தொடர்ந்து இருக்குமாறு செய்யப்பட்டது. டீசல் விலை உயர்வு மக்களைப் பாதிக்காத அளவில் இதைச் செய்திருக்கிறோம். இதன்மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ரூ.108.19 கோடியாகும் என்று ஆணையாளர் அறிக்கை கொடுத்திருக்கிறார்.

The Committee decided not to recommend any modification.

3. G.O.Ms.No.63 Commercial Taxes and Registration (B2) Department dated 12-7-2006

அரசு இணைச் செயலாளர்: சுனாமியால் பாதிக்கப்பட்ட நபர்களின் மறுவாழ்விற்காக நாட்டுப் படகுகள் மற்றும் இயந்திரப் படகுகளில் படகுக்கு வெளியே பொருத்தப் பயன்படுத்தப்படும் மோட்டார்கள் விற்பனைமீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்காக மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 29/2007-2008

Sub. : Notifications issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959)

1. ***G.O.Ms.No.121, Commercial Taxes and Registration (B2) Department, dated 6-10-2006.***
2. ***G.O.Ms.No.120, Commercial Taxes and Registration (B2) Department, dated 6-10-2006.***
3. ***G.O.Ms.No.86, Commercial Taxes and Registration (B2) Department, dated 11-8-2006.***

Additional Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government to make an exemption or reduction in rate, whether prospectively or retrospectively in respect of any tax payable under this Act and accordingly, the Government had issued the above notifications.

1. G.O.Ms.No.121, Commercial Taxes and Registration (B2) Department, dated 6-10-2006)

அரசு இணைச் செயலாளர்: பிண்ணாக்கு மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றுக்கு விற்பனை வரி விலக்கு அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று 7–8–2006 அன்று மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்கு இணங்க புண்ணாக்கு மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றிற்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டது. விற்பனை அளவு ஆண்டு ஒன்றுக்கு 300 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் இந்த வரி விலக்கு அளிக்கப்பட்டது.

தலைவர்: டர்ன்–ஓவர் 300 கோடி ரூபாய் என்று எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது?

அரசு இணைச் செயலாளர்: தமிழ்நாட்டில் சமீபத்தில் இந்த உச்சவரம்பு 500 கோடி ரூபாய் என்று ஆக்கிவிட்டோம். வெளிமாநில விற்பனை செய்பவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த முற்படுவார்கள். இதைத் தடுக்கவே இந்த உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

2. G.O.Ms.No.120, Commercial Taxes and Registration (B2) Department, dated 6-10-2006)

அரசு இணைச் செயலாளர்: இந்த அறிவிக்கை, சொந்தமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தகவல் தொழில்நுட்பத் துறை வாங்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொருத்தவரையில் வரிவிலக்கு அளித்து வெளியிடப்பட்ட அறிவிக்கையாகும். இது ஓர் அரசுத் திட்டம். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிற துறைதான் வரி கட்ட வேண்டும். அரசே வரி கட்ட வேண்டிய நிலையிருப்பதால் வரி விலக்கு அளிக்கப்பட்டது. மேலும் இந்தத் திட்டம் அரசின் கொள்கை முடிவாகும்.

The Committee decided not to recommend any modification.

3. G.O.Ms.No.86, Commercial Taxes and Registration (B2) Department, dated 11-8-2006)

அரசு இணைச் செயலாளர்: இது, வேதாரண்யம், கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்தைச் சேர்ந்தவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனையின்பேரில் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் அறிவிக்கையாகும். இந்த குருகுலம் ஒரு தொண்டு நிறுவனம் ஆகும். இலாப நோக்கம் இல்லாத நிறுவனம். இந்த நிறுவனம் ஆரம்பித்த காலத்திலிருந்தே இந்தச் சலுகையைப் பெற்று வருகிறார்கள். மேலும் இந்த நிறுவனம் அச்சிடுதல், மின்னணுப் பொருட்கள் மற்றும் ஊதுவத்தி தயாரிப்பு குறித்தும் பயிற்சி அளித்து வருகிறார்கள்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 30/2007-2008

Sub. : Notifications issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959)

1. ***G.O. (2D) No. 96 Commercial Taxes and Registration (D2) Department, dated 26-7-2006.***
2. ***G.O. (2D) No. 97 Commercial Taxes and Registration (D2) Department, dated 26-7-2006.***
3. ***G.O. (2D) No. 90 Commercial Taxes and Registration (D2) Department, dated 20-7-2006.***

*****

Additional Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government by notification to remit the whole or any part of the tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government had issued the above Notifications.

1. G.O.(2D) No. 96 Commercial Taxes and Registration (D2) Department, dated 26-7-2006.

அரசு இணைச் செயலாளர்: சங்குகள் விற்பனையில் ஒரு சதவிகிதம் வரி குறைவாக வசூல் செய்தது குறித்த அறிவிக்கையாகும். மீன் வளத் துறை 1982 முதல் 1984 வரையிலான ஆண்டுகளில் உள்ளூரில் சங்குகள் விற்பனை செய்ததில் 5 சதவிகிதத்திற்குப் பதிலாக 4 சதவிகிதத்தில் சென்னை, மீன் வள உதவி இயக்குநர் மூலமாக உள்ளூர் வரி வசூலித்தது. மேற்கண்ட 1 சதவிகித வித்தியாசத் தொகையான ரூ.30,398/–ஐ தள்ளுபடி செய்வது என்று அரசு முடிவெடுத்து அதன்படி தள்ளுபடி செய்து மேற்கண்ட அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

தலைவர்: இந்த அறிவிக்கையை சட்டமன்றத்தில் வைக்கப்படும்பொழுது, ஆங்கில அறிக்கையில் அரசாணை எண் 96 என்றும், தமிழில் உள்ள அறிவிக்கையில் அரசாணை எண் 97 என்றும் முரண்பட்டு உள்ளது. எனவே, மேற்கண்ட அறிவிக்கைக்கு ஒரு திருத்த அறிவிக்கை ஒன்றை துறை வெளியிட்டு அதனை அடுத்து நடைபெற இருக்கின்ற குளிர்கால கூட்டத்தொடரின்போது சட்டமன்றத்தில் வைக்க வேண்டும்.

The Committee recommended that as there was discrepancy in the Government Order Number specified in English and Tamil version of the notification the department might issue necessary amendment rectifying the G.O. No. found in the Tamil version and to place the Notification in the Legislative Assembly during the ensuing winter session.

2. G.O. (2D) No. 97 Commercial Taxes and Registration (D2) Department, dated 26-7-2006.

அரசு இணைச் செயலாளர்: 18–7–1986 அன்று வணிக வரிகள் துறை ஆணையர் தனது கடிதத்தில் பள்ளி மாணவர்கள் பயன்படுத்துகின்ற வரைபடங்கள் விற்பனை வரி விதிப்பிற்கு உட்பட்டதல்ல என்று ஒரு விளக்கம் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து, 6–5–1991 நாளிட்ட வணிக வரித் துறையின் கடிதத்தில் வரைபடங்கள் வரி விதிப்பிற்கு உட்பட்டவையாகும் என்றும், முன்பு கொடுத்த விளக்கம் தவறு என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது. எனவே, 18 ஜூலை 1986–லிருந்து 5 மே 1991 வரையிலான கால அளவிற்கு விற்பனை செய்யப்பட்ட வரைபடங்கள் மற்றும் விளக்கப் படங்கள் மீது சில வணிகர்கள் செலுத்த வேண்டிய வரித் தொகையான ரூ.1,09,122/–ஐ தள்ளுபடி செய்ய, வேய்வர் கமிட்டி முன்பு வைத்து, பரிசீலனை செய்து தள்ளுபடி செய்ய அரசு முடிவெடுத்து மேற்கண்ட அறிவிக்கையை வெளியிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்: முதலில் வரி விதிக்க வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டு பிறகு ஏன் வரி விதிக்க வேண்டும் என்று ஆணையர் சொல்கிறார்?

அரசு இணைச் செயலாளர்: ஆணையாளர் ஒரு விளக்கம் கொடுப்பதற்கு முன்பு பல்வேறு பிரச்சினைகளையும் ஆராய்கிறார். அவர்களுக்கு உள்ள சட்டபூர்வமான அதிகாரத்தை வைத்து இவ்வாறு செய்திருப்பார் என்று கருதுகிறேன். மேலும், Waiver Committee–ல் வைத்துத்தான் அரசு தள்ளுபடி செய்ய முடிவு எடுத்திருக்கிறது.

The Committee decided not to recommend any modification.

3. G.O.(2D)No. 90, Commercial Taxes and Registration (D2) Department, dated 20-7-2006

அரசு இணைச் செயலாளர்: 17–7–1996 முதல் 16–9–1996 வரையிலான காலகட்டத்தில் மின்னணுப் பொருட்களின் பாகங்களின் விற்பனை மீது முதலில் 4 சதவிகிதம் வரி போட்டோம். ஆனால் வரி விதிப்பு அதிகாரி 17–7–1996 ஆம் தேதியிலிருந்து முன்தேதியிட்டு 11 சதவிகித வரி விதிப்பு செய்துள்ளார். ஆனால், முந்தைய ஆணையை ஏற்புடையதாகக்கொண்டு, வணிகர்கள், வாங்குவோரிடமிருந்து வரியை வசூலிக்கவில்லை என்று தெரிவித்துவிட்டனர். எனவே, மேற்கண்ட காலகட்டத்தில் செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத் தொகையான ரூ.600/–ஐ தள்ளுபடி செய்ய அரசு முடிவு எடுத்து மேற்கண்ட அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 31/2007-2008

Sub. : Notifications issued under Tamil Nadu General Sales Tax Act 1959
G.O. Ms. No. 75, Commercial Taxes (B2) Department, dated 28-6-2005

Additional Secretary (Assembly) stated that Section 17 (3) of the TNGST Act 1959 (TN Act 1 of 1959) empowered the Government to cancel or vary any notification issued under Sub-section (1) and that in exercise of the above powers the Government had issued some variations to the Commercial Taxes Department Notification No. II (1)-CTRE/41/94, dated the 31st March 1994 published at page 29 of Part II Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated 4-5-1994 substituting the expression "Madras Export Processing Zone" occurring in two places as "Madras Special Economic Zone, Tambaram, Chennai and units located in Special Economic Zones" in the State of Tamil Nadu notified by the Government of India.

He further stated that in the Second Notification also the Government had issued variation to Commercial Taxes and R.E. Department Notification No. II (1) CTRE/100/97, dated 21-11-1997 published at Page 90 of Part II Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th December, 1997 omitting the word "and units located in Chennai Export Processing Zone".

Section 17(1) of the TNGST Act 1959 (TN Act 1 of 1959) empowered the Government to issue Notifications with prospective (or) retrospective exemption from payment of tax or reduction in the rate of tax on the sale of any specified goods or class of goods at all points or a specified point or points in the series of sales and in exercise of the above powers the Government had issued third notification granting exemption in respect of Sales Tax, Surcharge, resaletax and additional Sales Tax payable by any dealer for purpose of setting up, operation, maintenance, manufacture, trading production, processing, assembling, repairing, reconditioning, re-engineering, packaging or packaging accessories in an unit located in Madras Special Economic Zone, Tambaram, Chennai and other Special Economic Zones, in the State of Tamil Nadu notified by the Government of India, subject to the condition that the dealer should furnish a Certificate duly countersigned by the Special Economic Zone Authority and the goods purchased are used only for the aforesaid purpose.

தலைவர்: இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டது குறித்து விளக்கம் சொல்லுங்கள்.

அரசு இணைச் செயலாளர்: நான் ஏற்கெனவே கூறியபடி, நோக்கியா என்ற நிறுவனத்திற்கு மட்டும்தான் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்த சலுகையை அளித்தோம். இப்போது மேற்கண்ட அறிவிக்கையில், தாம்பரத்தில் உள்ள Madras Export Processing Zone என்பதை மாற்றி Madras Special Economic Zone என்று திருத்தம் வெளியிட்டிருக்கிறோம். மத்திய அரசு எப்போதெல்லாம், சில பல பகுதிகளை சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று அறிவிக்கை மூலம் தெரியப்படுத்துகிறதோ, அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதிகளில்

கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு வரி விதிப்புச் சலுகை வழங்குவதற்காக அறிவிக்கை வெளியிடப்பட்டது:

"Setting up, operation, maintenance, manufacture, trading production, processing, assembling, repairing, reconditioning, re-engineering, packaging or packaging accessories in an unit located in Madras Special Economic Zone, Tambaram, Chennai and other Special Economic Zones, in the State of Tamil Nadu notified by the Government of India".

எனவே, மத்திய அரசு சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று அறிவிக்கை வெளியிட்டிருந்தால் போதும். ஆட்டோமேட்டிக்காக அவர்கள் exemption பெறுவார்கள். VAT Act-ல் Zero Rating என்று கொண்டு வந்துவிட்டோம். Zero Rating என்றால் tax கட்ட வேண்டியது இல்லை. வாட் வரி விதிப்பு அமலுக்கு வந்துவிட்டதால், சட்டத்திலேயும் இதைக் கொண்டு வந்துவிட்டோம்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 32/2007-2008

Sub. : Tamil Nadu General Sales Tax Act 1959 - Notification issued.
[G.O. (2D) No. 123, Commercial taxes and Registration Department , dated 23-8-2006]
[G.O. (2D) No. 134, Commercial taxes and Registration Department , dated 4-9-2006.]

*****

Additional Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of the tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act and in exercise of the powers above the Government had issued the above notifications.

1. G.O. (2D) No. 123, Commercial taxes and Registration Department, dated 23-8-2006.

அரசு இணைச் செயலாளர்: இந்த அறிவிக்கையானது, வேலூரைச் சேர்ந்த வாசுதேவ முதலியார் அண்டு சன்ஸ் என்ற நிறுவனம் பற்றியதாகும். மேற்கண்ட நிறுவனம் செய்த வறுகடலை விற்பனை மீது 3 சதவிகித வரி விதித்து கமிஷனர் முதலில் விளக்கம் கொடுத்துவிட்டார். அதன் பிறகு, இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளின் அடிப்படையில் வரி விதிப்பைத் திருத்தம் செய்து 8 சதவிகித வரி விதித்து ஆணையிடப்பட்டது. வணிகர்கள் வாங்குபவர்களிடமிருந்து வரியை வசூலிக்கவில்லை என்ற காரணத்தினால், வரிவிதிப்பின் வித்தியாசத் தொகையினைச் செலுத்த நிறுவனம் மறுத்துவிட்டது. எனவே, அரசு இதனைப் பரிசீலித்து வரி வித்தியாசத் தொகையினைத் தள்ளுபடி செய்து அறிவிக்கை வெளியிட்டது.

இணைச் செயலாளர் (சட்டத் துறை): வறுகடலை என்பதை எந்த இனத்தின்கீழ் வகை செய்கிறார்கள்?

அரசு இணைச் செயலாளர்: வறுகடலை அதாவது Fried Gram என்பது Declared Goods Item-ல் வரும். இதற்கு 4 சதவிகித வரி உண்டு.

தலைவர்: தற்போது, தமிழ்நாடு முழுவதும் என்ன விகிதத்தில் வரி விதிக்கப்படுகிறது?

அரசு இணைச் செயலாளர்: இப்போது நாம் முழு வரி விலக்கு கொடுத்திருக்கிறோம்.

The Committee decided not to recommend any modification.

2. G.O. (2D) No. 134, Commercial Taxes and Registration Department, dated 4-9-2006.

அரசு இணைச் செயலாளர்: மேற்கண்ட அறிவிக்கையானது, 5–10–1994 முதல் 12–12–1996 வரையிலான காலகட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட கான்கிரீட் தொட்டிகள்மீது செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி வித்தியாசத் தொகையைத் தள்ளுபடி செய்வது குறித்ததாகும். மேற்குறிப்பிட்ட கால அளவில், கான்கிரீட் தொட்டிகளுக்கு 8 சதவிகிதம் வரி விதிக்கப்பட வேண்டும் என்று ஆணையாளர் விளக்கம் அளித்திருந்தார். திரும்பவும், 1997 முதல் 1998 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு 16 சதவிகித வரி விதித்திருந்தார். இந்த விற்பனை முழுவதும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செய்யப்பட்டதாகும். ஆனால், மின்சார வாரியம், தாங்கள் கான்ட்ராக்ட்–படிதான் நாங்கள் போட்டோம், அதனால் தங்களால் வரி வித்தியாசத் தொகையினைச் செலுத்த இயலாது என்று தெரிவித்துவிட்டனர். டீலரும், 5–10–1994 மற்றும் 12–12–1996 ஆகிய நாட்களிட்ட வணிக வரிகள் துறை ஆணையாளரின் முதல் இரண்டு விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வீதமே வரி வசூலித்திருந்தார். எனவே, மேற்கண்ட வரி வித்தியாசத் தொகையினை தள்ளுபடி செய்ய அரசு முடிவெடுத்து, Waiver Committee-யில் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் வரையிலும் ஆணைகள் பெற்று மேற்படி தள்ளுபடி ஆணை வெளியிடப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 33/2007-2008

Sub. : Tamil Nadu General Sales Tax Act 1959- Notification- Issued ***(G.O. (2D) No. 77, Commercial Taxes and Registration (B.2) Department, dated 26-7-2006.]***

Additional Secretary (Assembly) stated that Section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to issue Notification with prospective or retrospective exemption from payment of Tax or reduction in the rate of Tax under the said Act on the sale or purchase of any specified goods or class of goods at all points or at a specified point or points in the series of sales and that section 17 (3) of the Act empowered the Government to cancel or vary any notification issued under Section 17 (1) of the Act.

He further stated that in exercise of the powers conferred under Section 17 (3) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (T.N. Act 1 of 1959) the Government had issued orders relating to variation to the Commercial Taxes Department Notification No.II (1) C.T./71 (b) /2004 published at pages 1 and 2 of part II - Section -1 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated 29-10-2004. In the said Notification against the words, fishermen having mechanized boats in item No.1, the expression, "Fifty thousand kilo Liters" per annum had been substituted as 'Seventy five thousand kilo Litres' and the expression in figures, in the form of declaration under the item (1), had also been substituted as "75,000 kilo litres instead of 50,000 kilo litres".

அரசு இணைச் செயலாளர்: அரசு, ஏற்கெனவே மாதம் ஒன்றுக்கு 5,000 விசைப் படகுகள் ஒவ்வொன்றுக்கும் 1,000 லிட்டர் டீசல் வரை விற்பனை வரி விலக்கு அளித்திருந்தது. இந்த வரி விலக்கினை, மாதம் ஒன்றிற்கு 1,500 லிட்டர் வரை அளிக்க வேண்டுமென்று மீனவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்தனர். அரசும் மீனவர்களுடைய வேண்டுகோளை ஏற்று தற்போது அளிக்கப்பட்டுவரும் வரி விலக்கு மாதம் ஒன்றிற்கு 1,500 லிட்டர் வரை அளிக்கப்படும் என்று 22–7–2007 அன்று அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது. மேற்கண்ட சலுகையை நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதால், அதனை நிறைவேற்றும்பொருட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee decided not to recommend any modification.

TUESDAY, THE 14th AUGUST 2007

The Committee on Delegated Legislation met at 11-30 a.m. on Tuesday, the 14th August 2007 in the Committee Room, Legislators Residential Quarters (Amenity Block), Chennai-600 002.

The following were present:

CHAIRMAN

Thiru. Durai Chandrasekaran

MEMBERS

Thiru. O. Subramaniam

Thiru. P.N. Periyannan

Thiru. M. Anbazhagan

Thiru. R.M. Palanisamy

SECRETARIAT

Thiru. V.S. Subramanian .. Additional Secretary

Tmt. Janahee, Joint Secretary to Government, Law Department, was also present.

The following officials from Commercial Taxes Department introduced themselves before the Committee:

COMMERCIAL TAXES DEPARTMENT

1. Thiru. Subbarayan,
   Joint Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai-600 009.

2. Thiru. K. Satchidanandam,
   Deputy Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai-600 009.

3. Thiru. Sekar,
   Deputy Commissioner,
   O/o. The Commissioner of Commercial Taxes,
   Chepauk,
   Chennai-600 005.

4. Thiru Neelamegan,
   Under Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai-600 009.

The Committee first took up for consideration the following Memoranda:

MEMORANDUM No. 34/2007-2008

Sub. : Tamil Nadu General Sales Tax Act 1959- Notification- Issued ***G.O. (2D) No. 66, Commercial Taxes and Registration (B-2) Department, dated 17-7-2006.***

Additional Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to issue Notification with prospective or retrospective exemption from payment of Tax or reduction in the rate of Tax on the sale or purchase of any specified goods or class of goods at all points or at a specified point or points in the series of sales.

He also stated that section 17 (3) of the said Act empowered the Government to cancel or vary any notification issued under Section 17 (1) of the Act.

In exercise of the powers conferred under section 17(3) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act. 1 of 1959), the Government had issued orders in respect of variation to the following notifications:-

Notification – I-No. 11(1)/CT&RE/70/97 published at page 64 of part –II Section -1.

Notification – II-No. 11(1)/CT&RE/71/97 published at page 65 and 66 of part –II-Section – I and

Notification – III-No. 11 (1)/CT&RE/72/97 published at page 67 of part –II- Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated 1-10-1997.

In the said notifications the expression "Thiruvalargal Ford India Limited" had been substituted as "Thiruvalargal Ford India Private Limited" wherever they occur in the notification, in order to enable the Company to continue to avail the Tax exemption and deferral benefits granted to the company.

அரசு இணைச் செயலாளர்: முதலில் மகிந்திரா மற்றும் ஃபோர்டு இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு இந்த வரிவிலக்கு மற்றும் deferral சலுகை தரப்பட்டிருந்தது. பின்னர் அந்நிறுவனத்தை ஃபோர்டு இந்தியா லிமிடெட் நிறுவனம் தன்னகத்தே கொண்டது. பின்னர் 2000 ஆம் ஆண்டிலே ஒரு Amendment போட்டு 1997 அறிக்கையில் அதற்கான திருத்தத்தை மேற்கொண்டோம். தற்போது அதை ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் என மாற்றிக் கொடுத்துள்ளோம்.

இம்மாதிரி செய்யப்படவில்லை என்றால் அவர்களால் இந்த வரிவிலக்கு மற்றும் டெபரல் சலுகையைப் பெற முடியாது.

திரு. எம். அன்பழகன்: எனக்கு ஒரு சந்தேகம். தற்போது மகிந்திரா மற்றும் ஃபோர்டு என இரு வேறு நிறுவனங்கள் இருக்கின்றனவா? இந்த வரிச் சலுகை இரு நிறுவனங்களுக்கும் தரப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன்.

அரசு இணைச் செயலாளர்: அப்படியல்ல. மகிந்திரா மற்றும் ஃபோர்டு நிறுவனங்கள் Joint Venture என்ற வகையில் கூட்டாக இருந்தார்கள். பிறகு மகிந்திரா நிறுவனம் விலகிப்போய் விட்டார்கள். தற்போது ஃபோர்டு நிறுவனம் தான் அந்தச் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

The Committee, after some discussion decided not to recommend any modification.

MEMORANDUM No. 35/2007-2008

Sub. : Tamil Nadu General sales Tax Act 1959 - Notification- Issued ***G.O. (2D) No. 91, Commercial Taxes and Registration (B-2) Department, dated 23-8-2006.***

Additional Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to issue Notification with prospective or reprospective exemption from payment of Tax or reduction in the rate of Tax on the sale or purchase of any specified goods or class of goods at all points or at a specified point or points in the series of sales.

He added that section 17(2) of the said Act empowered the Government to give exemption from payment of Tax or reduction in the rate of Tax notified under sub-Section (1) and to extend to the whole of state or to any specified area or areas therein subject to such restrictions and conditions as specified in the notification.

He also stated that in exercise of the powers conferred under Sections 17(1) and (2), above the Governrnent had issued the notification exempting the Tax payable under the said Act by any dealer on the sale of materials notified in the Appendix to this notification, to M/s. Shanthi Mohan Charitable Trust, Chennai to rebuild District Headquarters Hospital at Nagapattinam subject to filing of certificate obtained from the said institution as prescribed in the Notification.

அரசு இணைச் செயலாளர்: கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியால் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையின் மூன்று பிளாக்குகளும் முழுவதுமாக சேதமடைந்துவிட்டன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். அவற்றைத் திரும்ப கட்டுவதற்கு சுகாதாரத் துறையில் ஆணைகள் வழங்கப்பட்டன. அவற்றில் ஒரு பிளாக்கை சுமார் 3.50 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு திருவாளர்கள் சாந்தி மோகன் சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நிறுவனம் அதற்கு ஒப்புக்கொண்டு இதனைக் கட்டுவதற்கு அவர்கள் வாங்குகிற அனைத்துப் பொருட்களுக்கும் வரிவிலக்கு அளிக்குமாறு கேட்டார்கள். அதன் பிறகு கேபினட்டில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கை வெளியிட்டோம். அதன்படி அவர்கள் கட்ட வேண்டியிருந்த ரூ.24,03,261/– வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் இந்த வரிவிலக்கு அளிப்பதற்கு முன்னரே அவர்கள் பொருட்களை வாங்கி பணியை ஆரம்பித்துவிட்டதனால் முன் தேதியிட்டு இந்த வரி விலக்குச் சலுகையை அளித்தோம்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 36/2007-2008

Sub. : Tamil Nadu General Sales Tax Act 1959 - Notification - Issued ***G.O. Ms. No. 71, Commercial Taxes and Registration (B-2) Department, dated 22-7-2006.***

Additional Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to issue Notification with prospective or retrospective exemption from payment of Tax or reduction in the rate of Tax under the said Act on the sale or purchase of any specified goods or class of goods at all points or at a specified point or points in the series of sales.

He added that section 17 (3) of the said Act empowered the Government to cancel or vary any notification issued under Section 17 (1) of the Act.

Accordingly the Government had issued the 10 Notifications in the above Government Order.

தலைவர்: இந்த அறிவிக்கை குறித்து சொல்லுங்கள்.

அரசு இணைச் செயலாளர்: கடந்த 22–7–2006 அன்றைய நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில பொருட்களுக்கு வரிவிலக்கு மற்றும் வரிச் சலுகைகளை அறிவித்தார்கள். இதன்படி பருப்பு மற்றும் சமையல் எண்ணெய்க்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதேமாதிரி தேயிலைக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரி, அதாவது 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படும் எனவும் மத்திய விற்பனை வரி, 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதேபோல் கைத்தறியை ஊக்குவிக்க சிட்டா நூலுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும் என்றும் செங்கல் உற்பத்தியில் பயன்படும் Fly Ash–க்கும், தமிழ் மென்பொருளுக்கும் தகவல் தொழில்நுட்பவியல் துறை கோரியவாறு விதிகளின்படி வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு வரிவிலக்கு மற்றும் வரிச் சலுகைகளுக்கு தனித் தனியே அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

கூடுதல் செயலாளர் (சட்டமன்றம்): இச்சலுகையை அனுபவிக்க மொத்த விற்பனை அளவு 300 கோடி என்று ஏன் உச்சவரம்பு நிர்ணயிக்கபட்டிருக்கிறது?

அரசு இணைச் செயலாளர்: இதற்குக் காரணம் என்ன என்றால் Inter-State Sale என்று சொல்லக்கூடிய வெளி மாநிலங்களில் மேற்கண்ட பொருட்கள் விற்கப்பட்டால் அவர்கள் அந்தச் சலுகையைப் பெறக் கூடாது என்பதற்காகத்தான் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர்.எம். பழனிசாமி: அறிவிக்கை எண் 4–ல் கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் தேயிலை ஏல மையத்திற்கு மட்டும் இந்த வரிச் சலுகை தரப்படும் என்று இருக்கிறது. மற்ற இடங்களுக்கும் இதுபோல் தரப்படுகிறதா?

அரசு இணைச் செயலாளர்: தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் மட்டும்தான் தேயிலை ஏல மையங்கள் இருக்கின்றன. அதனால் அந்த மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு மட்டும்தான் இச்சலுகை தரப்படுகிறது. மற்ற லோக்கல் விற்பனைக்கு சாதாரண வரிதான் விதிக்கப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்திய பிறகு தேயிலைக்கு 1 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம்.

TEASERVE என்பது ஒரு அரசு ஏஜென்சி. இந்த ஏல மையத்திலிருந்து செய்யப்படும் மாநிலங்களுக்கிடையிலான தேயிலை விற்பனைமீது வரி விகிதத்தை 1 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம். ஆனால் இந்த ஏஜென்சி ஃபார்ம் சி அல்லது ஃபார்ம் டி அளிக்க வேண்டும். மற்றவர்களுக்கு அந்த வரியை 4%–லிருந்து 2%–ஆகக் குறைத்திருக்கிறோம். TNGST வரி, CST வரி, இவற்றிற்கெல்லாம் தனித் தனியாக அறிவிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அதேபோல் அறிவிக்கை எண் 7–ஐப் பொறுத்தவரை அது கூடுதல் விற்பனை வரிச் சலுகை தொடர்பானது. சர்சார்ஜ் போன்ற வரிச் சலுகைகளுக்கும் தனித் தனியே அறிவிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கடந்த 1–1–2007 முதல் மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு வந்தது முதல் கூடுதல் விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் போன்ற வரிகளை எடுத்துவிட்டோம். தேயிலைக்கு 4 சதவிகிதமாக இருந்த மத்திய விற்பனை வரி 3 சதவிகிதமாக மத்திய அரசு குறைத்துள்ளது. அடுத்த ஆண்டு அது 2 சதவிகிதமாகக் குறைக்கப்படும். படிப்படியாக அது அறவே ரத்துச் செய்யப்பட்டுவிடும்.

அறிவிக்கை X–ஐப் பொறுத்த வரையில் செங்கல் உற்பத்தித் தொழிலை ஊக்குவிக்கும்வகையில் செங்கல் உற்பத்தியாளர்கள் வாங்கும் fly ash–க்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு இது பொருந்தாது.

The Committee, after some discussion decided not to recommend any modification.

MEMORANDUM No. 37/2007-2008

Sub. : Tamil Nadu General sales Tax Act 1959 - Notification - Issued ***G.O. Ms. No. 100, Commercial taxes and Registration (B-2) Department, dated 6-9-2006.***

Additional Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to issue Notification with prospective or retrospective exemption from payment of Tax or reduction in the rate of Tax under the said Act on the sale or purchase of any specified goods or class of goods at all points or at a specified point or points in the series of sales.

He also stated that section 17 (3) of the said Act empowered the Government to cancel or vary any notification issued under Section 17 (1) of the Act.

Accordingly the Government had issued 4 Notifications in the above Government Order.

அரசு இணைச் செயலாளர்: 7–8–2006 வணிக வரி மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அமைச்சரிடம் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

முன்பு பருப்பு மற்றும் பயறு வகைகளுக்கு மட்டும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இவ்வரிவிலக்கை பருப்பு வகையிலிருந்து தயாரிக்கப்படும் மாவு பொருட்களுக்கும், வறுகடலைக்கும் அளித்திடுமாறு கோரிக்கைகள் வந்ததன் அடிப்படையில் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன.

அதேபோல் மானியக் கோரிக்கை அறிவிப்பினையொட்டி கருப்புக்கட்டி மற்றும் நாட்டுசர்க்கரைக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

குச்சி சாம்பிராணி மற்றும் சாம்பிராணி வில்லைகள், கழிவுத் தாள்கள், பயன்படுத்தப்பட்ட காலி புட்டிகள் மற்றும் 200 ரூபாய்க்குக் குறைவான அதிகபட்ச சில்லரை விற்பனை விலை விகிதத்தைக் கொண்ட காலணிகள் ஆகிய அனைத்துக்கும் மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று இந்த வரிவிலக்குச் சலுகைகள் அளித்து மேற்கண்ட அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee, after some discussion decided not to recommend any modification.

MEMORANDUM No. 38/2007-2008

Sub. : Amendment to Tamil Nadu Tax on Luxuries Act 1981 ***(G.O. Ms. No. 112. Commercial Taxes and Registration (C-2) Department, dated 20-9-2006)***

*****

Additional Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under section 23-A (1) of the Tamil Nadu Tax on Luxuries Act 1981 (T.N. Act 6 of 1981) the Government had issued orders exempting the luxury Tax payable under the said Act on luxury provided in a hotel in Tamil Nadu by

the employees or representatives of the World Bank, subject to the condition that the World bank should issue a certificate of stay, to that hotel quoting this notification number, name and the period of stay.

The committee might observe that the date of effect of the notification had not been mentioned.

அரசு இணைச் செயலாளர்: உலக வங்கி என்பது ஐக்கிய நாடுகள் சபையினுடைய ஒரு அங்கம். ஐக்கிய நாடுகள் சபையின் சார்பாக சில வெளிநாட்டினுடைய பிரதிநிதிகள் இங்கு வந்து சில முக்கியமான திட்ட அலுவல்களைக் கவனிக்க ஒட்டல்களில் தங்குவார்கள். அவர்கள் ஐந்து நட்சத்திர ஒட்டல்களில் தங்கினால் ஆடம்பர வரி வசூலிக்கப்பட்டு வந்தது. புதுடில்லியில் இவ்வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் அதே மாதிரி தமிழ்நாட்டிலும் அச்சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று அவர்களுக்கு அந்த வரியிலிருந்து விலக்கு அளித்து அறிவிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் உலக வங்கி பிரதிநிதிகள் அங்கு தங்கியிருப்பது குறித்து சான்றிதழ் ஒன்றை அந்த ஒட்டலுக்கு அளிக்க வேண்டும்.

கூடுதல் செயலாளர் (சட்டமன்றம்): இந்த அறிவிக்கை என்றைக்கு முதல் அமலுக்கு வரும் என்பதை ஏன் போடவில்லை? இந்த அறிவிக்கை என்றிலிருந்து அமலுக்கு வரும்?

அரசு இணைச் செயலாளர்: அறிவிக்கை என்றைக்கு அரசிதழில் வெளிவந்ததோ அந்த நாளிலிருந்துதான் இந்தச் சலுகை அமலுக்கு வருவதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

The Committee recommended that since the date of effect had not been mentioned in the notification, the Department might issue an amendment to the above notification duly mentioning the date of effect of the Notification.

THURSDAY, THE 20th SEPTEMBER 2007

The Committee on Delegated Legislation met at 11-00 a.m. on Thursday, the 20th September 2007 in the D.R.D.A. Conference Hall, Collectorate, Coimbatore.

The following were present:

CHAIRMAN

Thiru. Durai Chandrasekaran

MEMBERS

Thiru. M. Anbazhagan

Thiru G. Senthamizhan

Thiru. R.M. Palanisamy

Thiru T.A. Meganathan

Thiru G. John Joseph

SECRETARIAT

Thiru A.M.P. Jamaludeen .. Deputy Secretary

Tmt. Janahee, Joint Secretary to Government, Law Department, was also present.

The following officials from Commercial Taxes Department introduced themselves before the Committee:

COMMERCIAL TAXES DEPARTMENT

1. Thiru. R. Chandra Kanthan,
   Joint Commissioner,
   O/o The Commissioner of
   Commercial Taxes,
   Chepauk, Chennai-5.

2. Thiru. K. Sekar,
   Deputy Commissioner,
   O/o. The Commissioner of
   Commercial Taxes,
   Chepauk, Chennai-5.

3. Thiru Neelamegan,
   Under Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai 600 009.

The Committee first took up for consideration the following Memoranda:

The deliberations are summarised as under:

MEMORANDUM No. 44/2007-2008

Sub.: Tamil Nadu General Sales Tax Act, 1959 - Notification Issued ***(G.O. Ms. No. 80, Commercial Taxes and Registration (D-2) Department, dated 24-2-2006).***

Deputy Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty of fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government had issued the above notification.

தலைவர்: தவறுதலாக விடுபட்டுவிட்டதாக தெரிகிறது. எப்படித் தவறு நடந்தது, அதற்கு என்ன காரணம்? சட்டமன்றத்தில் வைக்கக்கூடிய ஆவணங்கள் அனைத்தும் high authentic value கொண்டவையாகும். மிக முக்கியமான டாக்குமெண்ட். 'கவனக் குறைவு' என்று கூறியிருக்கிறீர்கள். யாருடைய கவனக் குறைவு என்று விளக்குங்கள்.

இணை ஆணையர்: சென்னை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைக்கு நிலக்கீல் பொருட்களை விற்பனை செய்யும்போது 4 சதவிகித வரி விதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 8 சதவிகித வரி விதிக்கப்பட்டது. இதைச் சரி செய்வதற்காக 19-12-1997 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையில் தவறுதலாக ஒரு வியாபாரி விடுபட்டுவிட்டார். அதனால் அவர் மேல்முறையீடு செய்தார். பொதுவாக மேல்முறையீடு செய்த காலத்தில் வெய்வர் ஆர்டர் போடுவது இல்லை. எனவே, குறிப்பிட்ட காலத்திற்கு விடுபட்டுப் போனதைச் சரி செய்வதற்காக மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): சட்டமன்றத்தில் வைக்கக்கூடிய ஆவணங்கள் மிக முக்கியமானவை. ஒவ்வொரு வார்த்தைக்கும், comma, full stop போன்றவற்றிற்கும் ஒரு அர்த்தம் உண்டு. ஆனால் துறையினர் விளக்கக் குறிப்பில் கவனக் குறைவாக விட்டுவிடப்பட்டது என்று சொல்லியிருக்கின்றார்கள்.

சார்புச் செயலாளர்: முதலில் வெளியிட்ட அறிவிக்கையில், 1990-91, 1991-92 ஆகிய இரண்டு வருடங்களுக்கும் சேர்த்துப் போட்டார்கள். ஆனால், தொகையில் 1990-91 ஆம் ஆண்டிற்குரிய தள்ளுபடித் தொகையைச் சேர்க்கவில்லை. எனவே, விடுபட்டுப் போன தொகைக்கு தற்போது தள்ளுபடி ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

தலைவர்: உங்கள் துறையினரே, 'கவனக் குறைவு' என்று சொல்லியிருக்கின்றார்கள்.

இணைச் செயலாளர், சட்டத் துறை: நீங்கள் மொத்தத் தள்ளுபடித் தொகையையும் போட்டிருக்க வேண்டும். 1990-91 ஆம் ஆண்டிற்குரிய தள்ளுபடித் தொகையை மொத்தத் தொகையில் சேர்க்கவில்லை. அதனால் அதற்காகத் தனியாக ஒரு அறிவிக்கை வெளியிட வேண்டிய நிலை உண்டாயிற்று. இதில் துறையினர், 'கவனக் குறைவு' என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை. விடுபட்டுவிட்டது என்று சொல்லியிருக்கலாம்.

தலைவர்: சட்டமன்றத்தில் வைக்கக்கூடிய எந்த ஒரு ஆவணமானாலும், you are fully responsible for that. The Legislature has authorised this Committee to see whether there were any deviation in the rules framed by the Government.

The Committee feels that the notifications issued in pursuance of the delegation of legislative powers are of high value and such lethargic mistakes such as 'left out for waiver' should be avoided in future. If it recurs, it will be seriously viewed by the Committee, hereafter.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 45/2007-2008

Sub. : Tamil Nadu General Sales Tax Act, 1959 - Notification Issued ***(G.O. Ms. No. 73, Commercial Taxes and Registration (D-2) Department, dated 24-2-2006).***

Deputy Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty of fee payable in respect of any period by any dealer under this Act and in excerise of the powers conferred under the above Section read with Section 3(2) and 3-A(2) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act,1971. (T.N. Act 24 of 1971) the Government had issued orders remitting a sum of Rs.38,248-/ being the Surcharge and additional surcharge payable on the sale of peas and peas Dhall for the period from 1-4-1992 to 24-12-1992 by TVL. Kirorimal Kashiram, subject to the condition that the said dealer should have collected the surcharge and additional surcharge on the said sale.

தலைவர்: இது குறித்து விளக்குங்கள்.

இணை ஆணையர்: இது 31-7-1984 முதல் 24-12-1992 வரையிலான காலத்திற்குண்டான பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு விற்பனைமீது செலுத்த வேண்டிய மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரியைத் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையாகும். முதல் ஆணை 13-11-1997 அன்று வெளியிடப்பட்டது. ஆனால் வணிகர்கள் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. ரிவைஸ்டு ஆர்டர் 7-10-1997-ல் வெளியிடப்பட்டது. ஒரு வணிகருக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை அரசாணையில் சேர்க்கப்படவில்லை. எனவே, அதைத் தள்ளுபடி செய்வதற்காக மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

இணைச் செயலாளர், சட்டத் துறை: 13-11-1997 அன்று ஆர்டர் இஷ்யு செய்துவிட்டார்கள். 7-10-1997-ல் ரெஸ்டோரேஷன் ஆனது. துறையினர் இதை நோட் செய்யவில்லை என்று கருதுகிறேன்.

இணை ஆணையர்: இந்த ஒரு டீலர் விடுபட்டுவிட்டார்.

CHAIRMAN: The Committee view this seriously because of the communication gap. The Department had taken more than one month time to get the proposal from the Commissioner of Commercial Taxes. அரசு ஓர் ஆணை வெளியிடுகிறது. கம்யூனிகேஷன் கேப் இருந்தால் – சட்டமன்றத்தில் வைக்கப்படுகின்ற டாக்குமெண்ட்களில் உள்ள ஒவ்வொரு வார்த்தை மற்றும் வரியும் முக்கியம் – அதனால் தவறு ஏற்பட்டால் குழு உறுப்பினர்களுடைய சந்தேகங்களை விளக்க வேண்டியது துறையின் கடமை.

திரு. ஆர்.எம். பழனிசாமி: இந்தக் குழுவினுடைய பணியே, சூப்பர்வைஸ் செய்வதுதான். சட்ட விதிகள் சரியாக இருக்கின்றதா இல்லையா என்பதை ஆய்வு செய்வதற்காகத்தான் இந்தக் குழு இருக்கிறது.

துணை ஆணையர்: அரசாணை முதலில் போடும்போது இந்த வணிகருடைய மேல்முறையீடு நிலுவையில் இருந்ததால் இந்தத் தொகை சேர்க்கப்படவில்லை. அரசாணை வெளியிடும்போது எல்லா டி.சி.-க்களிடமும் பிரேரணைகள் பெற்று கன்சாலிடேட் செய்து தெரிவிக்கிறோம். அதற்குள் இந்தப் பிராசஸ் முடிந்துபோய்விட்டது. அதனால் அந்தத் தொகையைக் கழித்து அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

தலைவர்: திருத்த ஆணைகள் 7–10–1997 அன்றே வெளியிடப்பட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் எப்படி இந்தத் தொகை மட்டும் விடுபட்டது? இதற்கு யார் பொறுப்பு?

இணை ஆணையர்: 7–10–1997 அன்று டிமான்ட் ரெய்ஸ் செய்திருந்தாலும், டீலருக்கு ஒரு மாதம் வரையில் அவகாசம் உண்டு. அவர் கட்டாததால் இதை அனுப்பிவிட்டோம்.

The Committee decided to seek a written clarification from the Government in Commercial Taxes and Registration Department.

MEMORANDUM No. 46/2007-2008

Sub : Notification issued under Tamil Nadu General Sales Tax Act, 1959.

1. ***G.O. (D) No.154, Commercial Taxes and Registration (D2) Department, dated 27-10-2006.***
2. ***G.O. (2D) No.148, Commercial Taxes and Registration (D2) Department, dated 13-9-2006.***

---

1. G.O. (D) No.154, Commercial Taxes and Registration (D2) Department, dated 27.10.2006.

Deputy Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty of fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government have issued the above notifications.

தலைவர்: வணிக வரிகள் துறை ஆணையர் இரண்டுவிதமான விளக்கங்கள் அளித்துள்ளதால், அரசுக்கு ரூ.1,11,73,433/– இழப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது. எந்தச் சூழ்நிலையில் இப்படிச் செய்தார்கள்?

இணை ஆணையர்: ஆர்.டி.எஸ். கிரில்ஸ் என்பது எலெக்ட்ரிக்கல் பொருளா இல்லையா என்பதை முடிவு செய்வதில் ஏற்பட்ட நிலைதான் இந்த அறிவிக்கை வெளியிடக் காரணமாகும். இந்தப் பொருட்கள் அனைத்தும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சப்ளை செய்யப்பட்டதாகும். இதை அவர்கள் ஒரு மெஷ் மாதிரி வைத்திருப்பார்கள். Sale of Electrical Goods to E.B. என்ற முறையில் மின்சார வாரியத்திற்கு 4 சதவிகிதம் என்ற அளவில் வரிவிதிப்பு செய்து 29–8–1991 அன்று ஆணையர் ஒரு விளக்கம் கொடுத்தார். அதன் பிறகு, தணிக்கைத் துறையினர் இதை ஆய்வு செய்து, இந்த ஆர்.டி.எஸ். கிரில்களை electrical assessories ஆகத்தான் பயன்படுத்துகிறார்கள். மேலும் எலெக்ட்ரிக்கல் பொருட்கள் என்றால் it should be operated by electricity or it should produce electricity என்று தணிக்கைத் துறையினர் கூறினார்கள். தணிக்கைத் துறை கூறியதை ஏற்று துறை இரண்டாவது விளக்கம் அளித்தது. ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியமும் அரசு நிறுவனம் என்பதாலும், முதலில் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில்

வணிகர்கள் 8 சதவிகித வரி வசூலிக்கவில்லை என்பதாலும், அமைச்சரவை முடிவுக்கேற்பவும், மேலும் அரியர்ஸ் இருந்தால் அந்த ஒப்பந்ததாரர்களுக்கு அடுத்த ஒப்பந்தம் கிடைக்காது., அவர்கள் பிளாக் லிஸ்ட்டில் போய்விடுவார்கள் என்பதாலும் இந்தத் தொகையினைத் தள்ளுபடி செய்ய கேபினெட் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு, மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

DEPUTY SECRETARY (ASSEMBLY): The Commissioner should have applied his mind at the time of issuing the first clarification. Whether the Commissioner had followed any yardstick while issuing the first clarification?

திரு. ஆர்.எம். பழனிசாமி: சமீப காலமாக, வணிக வரிகள் துறையினர் வெளியிடுகின்ற அறிவிக்கைகள் மூலம் அதிகமான அளவுக்கு தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது. அரசுக்கு பண இழப்பு ஏற்படுகிறது. என்ன Parameter வைத்து இருக்கிறீர்கள்?

தலைவர்: ஆணையாளர் விளக்கங்களை கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எதை அடிப்படையாக வைத்து விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): க்ளாரிபிகேஷன் கொடுப்பதற்கு ஆணையாளருக்கு அதிகாரமிருக்கிறது.

User Theory என்று உண்டு. What is the basis for giving first clarification?

திரு. ஆர்.எம். பழனிசாமி: இது எலெக்ட்ரிக்கல் குட்ஸ் என்பதை எப்படி டிசைட் செய்கிறீர்கள்?

இணை ஆணையர்: இதுபோன்ற technical things–ஐ நாங்கள் டிசைட் செய்வதில்லை. உதாரணமாக, விவசாயத் துறையைச் சார்ந்த பொருள் என்றால் நாங்கள் விவசாயத் துறையைக் கருத்து கேட்கிறோம். சம்பந்தப்பட்ட துறைகளையும் மற்றவர்களையும் கருத்து கேட்கிறோம்.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): க்ரில்லுக்கும் மின்சாரத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது சாதாரணமானவர்களுக்கு கூடத் தெரியும்.

The Committee records its deep sense of dismay and disappointment in issuing two different clarifications by the Commissioner of Commercial Taxes effecting a revenue loss to the tune of Rs.1,11,73,433/-. The Committee, therefore, decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department as to the circumstances which necessitated the Commissioner of Commercial Taxes to issue such two different clarifications, as it involves huge amount of loss to the exchequer.

2. G.O. (2D) No.148, Commercial Taxes and Registration (D2) Department, dated 13-9-2006.

தலைவர்: இந்த நிகழ்விலும் ஆணையாளர் இரண்டு அறிவிக்கைகள் வெளியிட்டுள்ளார். வரியை வசூல் செய்தார்களா இல்லையா என்பதை எப்படி செக் செய்கிறீர்கள்?

இணை ஆணையாளர்: எங்களுக்கு இது பேப்ரிக்கா இல்லையா என்பது தெரியவில்லை. அதனால், கோயம்புத்தூர் சென்ட்ரல் எக்சைஸ் கலெக்டரிடம் கருத்து கேட்கப்பட்டு, அவரும் இது பேப்ரிக்தான், 54.08–ல் வகைப்படுத்த வேண்டும் என்று கூறியதை ஏற்றுக்கொண்டோம். பின்னர், சென்னையிலும் இதேமாதிரி ஒரு நிகழ்வு ஏற்பட்டது. அதன்மீது சென்னையில் உள்ள சுங்க வரி ஆணையரிடம் கருத்து கேட்டோம். அவர் இதனை 39.26–க்கு கொண்டுவர வேண்டும் என்று சொன்னதால் அவ்வாறு செய்தோம். அந்த காலகட்டத்தில் அடிஷனல் எச்சைஸ் டியூட்டி லெவி செய்யவில்லை. நீங்கள் டாக்ஸ் போட

வேண்டுமென்றால் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதை அடிப்படையாக வைத்து இன்னொரு விளக்கம் கொடுக்கப்பட்டது.

தலைவர்: திருத்தம் எந்தத் தேதியில் வெளியிடப்பட்டது? சென்ட்ரல் எக்சைஸ் துறையினர் எப்போது தெரிவித்தார்கள்?

இணை ஆணையாளர்: 1–3–1994–ல் திருத்த ஆணைகள் வெளியிடப்பட்டன. 14–12–1993–ல் மத்திய சுங்க வரித் துறையினர் முடிவு தெரிவித்தனர்.

தலைவர்: நீங்கள் முதலிலேயே சென்னையில் உள்ள சுங்க வரிகள் துறை ஆணையரிடம் கருத்து கேட்டிருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம் என்று கருதுகிறோம்.

இணை ஆணையாளர்: முதல் டீலர் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர் என்பதால் கோயம்புத்தூரில் உள்ள சுங்க வரி அலுவலரைக் கேட்டோம். நாங்கள் புராடக்டைப் பார்ப்பது இல்லை. அந்தத் துறை வல்லுநர்களிடம் கருத்துக் கேட்டு அதன்படி நடக்கிறோம்.

The Committee records its deep sense of dismay and disappointment in issuing two different clarifications by the Commissioner of Commercial Taxes effecting a revenue loss to the tune of Rs.9,201/- + Rs.162/-. The Committee, therefore, decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department as to the circumstances which necessitated the Commissioner of Commercial Taxes to issue such two different clarifications.

MEMORANDUM No. 47/2007-2008

Sub. : Notifications issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959.

1. ***G.O. Ms. No.109, Commercial Taxes and Registration (B2) Department, dated 15-9-2006***
2. ***G.O. Ms. No.90, Commercial Taxes and Registration (B2) Department, dated 23-8-2006***

*****

No modifications were recommended.

MEMORANDUM No. 48/2007-2008

Sub. : Notification issued under Central Sales Tax Act, 1956.
(G.O. Ms. No.118, Commercial Taxes and Registration (C1) Department, dated 29-9-2006.)

*****

Deputy Secretary (Assembly) stated that in exercise of the powers conferred under Section 8(5) of the Central Sales Tax Act, 1956 (T.N. Act 74 of 1956), the Government of Tamil Nadu had issued orders exempting the tax payable by Tvl. Jeeva Sevalaya, Srivilliputhur under the said Act, on the sale of goods produced by them, in order to carry out charitable work and to provide employment opportunity in production and tailoring units.

தலைவர்: என்னென்ன பொருட்களுக்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது?

இணை ஆணையர்: பனை ஓலையைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களுக்கு வரி விலக்கு கொடுக்கப்படுகிறது.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): இதை நீங்கள் அறிவிக்கையில் குறிப்பாகச் சொல்லியிருக்கலாமே.

துணை ஆணையாளர்: ஒரு சில பொருட்களுக்கு வரிவிலக்கு கொடுக்கிறார்கள். பிறகு பொருட்களை மாற்றுகிறார்கள். பொருட்களை மாற்றும்போது ஒவ்வொரு முறையும் அறிவிக்கை கொடுக்க வேண்டியிருக்கும்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: பனை ஓலை பொருட்கள் என்று சொல்கிறீர்கள். அவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தி வேறு பொருட்களுக்கும் பெறக்கூடிய வாய்ப்பு இருக்காதா? அவர்கள் கமர்சியலாகப் போய்விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறோம்.

இணை ஆணையர்: 25 லட்ச ரூபாய் என்று சீலிங் நிர்ணயித்திருக்கிறோம். மேலும், காதி கமிஷனிடம் இருந்து ஒரு சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

While appreciating the intention of the Government for granting exemption to the institution which are carrying out welfare activities in the public interest, the Committee recommends that the names of the products for which exemption is being given might be specified in the notification itself instead of giving blanked exemption.

MEMORANDUM No. 49/2007-2008

Sub : Notification issued under Tamil Nadu Tax on Entry of Motor Vehicles into Local Areas Act, 1990.
(G.O. Ms. No.138, Commercial Taxes and Registration (C2) Department, dated 7-11-2006).

No modification was recommended.

MEMORANDUM No. 51/2007-2008

Sub. : Notification issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959.
(G.O. Ms. No.89, Commercial Taxes and Registration (B2) Department, dated 23-8-2006).

*****

Deputy Secretary (Assembly) stated that section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government to issue Notifications with prospective or retrospective exemption from payment of tax or reduction in the rate of tax under the said Act on the sale or purchase of any specified goods at all points or at a specified point or points in the series of sales and that in exercise of the powers conferred under the above section read with clause (b) of sub-section (1) of section 2 of the Tamil Nadu Additional Sales Tax Act, 1970 (Tamil Nadu Act 14 of 1970), the Government had issued orders exempting the additional tax payable under the said Tamil Nadu Act 14 of 1970 by Tvl. Hyundai Motor India Limited, Irungattukottai, Sriperumbudur, Kancheepuram District on the cars and components manufactured and sold by them.

He added that the above Notification issued shall be deemed to have come into force with effect from 1-10-1998 and remain in force upto 30-12-2012.

இணை ஆணையர்: தமிழக அரசும், ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனமும் 18–7–1996 அன்று செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 1998–லிருந்து 14 வருட காலத்திற்கு கூடுதல் வரியைப் பொறுத்தமட்டில் விலக்கு அளிக்க முடிவு செய்து வெளியிடப்பட்ட அறிவிக்கையாகும்.

தலைவர்: மொத்த வரித் தொகை எவ்வளவு?

இணை ஆணையர்: 14 வருடங்களுக்குச் சேர்த்து மொத்தம் ரூ. 63 கோடி அளவுக்கு வரும்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இது எக்சம்ஷனா அல்லது டெபரலா?

இணை ஆணையர்: ஏ.எஸ்.டி.–யைப் பொறுத்தவரையில் எக்சம்ஷன். விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் ஆகிய டெபரல் செய்யப்படுகிறது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 52/2007-2008

Sub : Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959.

Ref: 1. G.O.(2D) No.192, CT & Reg.(D2) Department, dated 11-12-2006.
2. G.O.(2D) No.199, CT & Reg. (D2) Department, dated 26-12-2006.
3. G.O.(2D) No.200, CT & Reg. (D2) Department, dated 26-12-2006.
4. G.O.(2D) No.202, CT & Reg. (D2) Department, dated 27-12-2006.

Deputy Secretary stated that section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government have issued the above notifications.

1. G.O.(2D) No.192, CT & Reg.(D2) Department, dated 11-12-2006.

தலைவர்: இந்த நிகழ்விலும் வணிக வரிகள் துறை ஆணையாளர் இரண்டு வேறுபட்ட விளக்கங்களை அளித்துள்ளார். எந்தச் சூழ்நிலையில் மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது?

இணை ஆணையர்: இந்த கிளே டைல்களில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று கிளேஸ்டு மற்றொன்று அன்கிளேஸ்டு. இதில் கிளேஸ்டு டைல் என்பது பீங்கான் மாதிரி இருக்கும். இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு வெரைட்டி இருக்கிறது. முதலில் இந்த விற்பனையை அன்கிளேஸ்டு என்று கிளாசிபை செய்து அதன்படி வரி விதிக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னர், ஸ்பார்டெக் என்ற புதிய வகை டைல் வந்தது. அவர்களுடைய தொழில்நுட்பத்தின்படி ஆய்வு செய்தபோது அவர்கள், இது மேட் பினிஷ்–ஆக இருந்தால்கூட இது கிளேஸ்டு டைல் என்று வகைப்பாடு செய்ய வேண்டும் என்று அவர்களுடைய டெக்னாலஜி புத்தகத்திலிருந்து தெளிவுரை கொடுத்தார்கள். அதனால் முன்னர் கொடுத்த கருத்தை மாற்றி 16 சதவிகிதம் வரி போடப்பட்டது. ஆனால் வணிகர்கள் முதலில் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையிலேயே வரி வசூலித்திருந்தனர். அதனால் அரசு வித்தியாசத் தொகையைத் தள்ளுபடி செய்ய முடிவு எடுத்து மேற்கண்ட அறிவிக்கையை வெளியிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த.அ. மேகநாதன்: 6 எஃப் இனம் என்றால் என்ன?

இணை ஆணையர்: 6 எஃப் இனத்தில் Mosaic Tiles, Ceramic Tiles, Roofing Wall Tiles போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: 16 சதவிகித வரியை 5 சதவிகிதம் என்று சொல்ல வேண்டிய காரணம் என்ன?

இணை ஆணையர்: Grievance Redressal Cell என்று ஒரு பிரிவை எங்களை துறையில் வைத்திருக்கிறோம். நான்கு உதவி ஆணையாளர்கள் இதற்காகப் பணியாற்றுகின்றனர். யூனிபார்ம்–ஆக ரேட் போட வேண்டுமென்று வைத்திருக்கிறோம். டீலர்களுக்கு யாரிடம் கேட்பது என்று தெரியாது. அதனால், ஆணையாளருக்கு மட்டும் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தலைவர்: இவ்வாறு தள்ளுபடி அல்லது ஒத்திவைப்பு செய்வது குறித்து, ஏதாவது கைடுலைன் வைத்து செய்தால் என்ன. ஏனென்றால் இப்போதுதான் உகந்த நேரம். ஒரு எக்ஸ்பர்ட் ஒருவரை வைத்து, கைடுலைன் மாதிரி வைத்து இதை பிக்ஸ் செய்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறோம்.

இணைச் செயலாளர்: மதிப்பு கூட்டு வரி முறை 1–1–2007–ல் அமலுக்கு வந்த பிறகு அந்தப் பிரிவை எடுத்துவிட்டோம். மேலும் இதுவரை 947 கிளாரிபிகேஷன் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி மாதிரி வைத்து செய்தால் இம்மாதிரியான குழப்பங்கள் எதுவும் வராது என்று நினைக்கின்றேன். இம்மாதிரி செய்தால் உங்கள் துறைக்கும் நன்றாக இருக்கும், டீலர்களுக்கும் கஷ்டம் இருக்காது.

இணை ஆணையர்: டெக்னிக்கல் செல் போன்று ஒன்று இருந்தால் நன்றாக இருக்கும். தற்போது, எக்சைஸ் டாரிப் கோடு என்ற ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

தலைவர்: ஏதாவது ஒரு வழிகாட்டி முறையைப் பின்பற்றி செய்தால் நன்றாக இருக்கும்.

இணை ஆணையர்: தள்ளுபடி செய்கின்ற நேரங்களில், விற்பனையான பொருள் தோல் பொருட்கள் என்றால், லெதர் நிறுவனத்திடம் கருத்து கேட்கிறோம், பிளாஸ்டிக் பொருள் என்றால், சென்னையில் உள்ள சிபெட் அமைப்பிடம் கருத்து கேட்கிறோம். எலெக்ட்ரானிக்ஸ் பொருட்களைப் பொறுத்தவரையில் எல்காட் நிறுவனத்திடம் ஒப்பீனியன் கேட்கிறோம். அதனால் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. கருத்து சொல்வதற்காக ரூ.5,000/. வரையிலும் பணம் செலுத்தச் சொல்கிறார்கள். சில சமயங்களில், டீலர்கள் அவர்களுக்குச் சாதகமான முறையில் கருத்துகளைப் பெறுவதும் நேர்ந்திருக்கிறது. நாம் வருவாய் நோக்கத்தோடு பார்க்கிறோம். ஆனால் ஒப்பீனியன் கொடுக்கிறவர்கள் அந்த மாதிரி செய்வதில்லை என்று கருதுகிறோம்.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): ரூ.5000/– வரை செலவு செய்தாலும், ஒரு கோடி ரூபாய் இழப்பு போன்றவற்றை தவிர்க்கலாமே?

துணை ஆணையர்: சில நேர்வுகளில், டீலர்களே, அவர்களுக்கு சாதகமாக ஒப்பீனியன் வாங்கி வரும் சூழ்நிலைகள் இருக்கிறது.

தலைவர்: வாட்–ல் கூட நாம் இதை இம்ப்ளிமென்ட் செய்யலாமே!

இணை ஆணையர்: அனைத்து மாநிலங்களிலும் வாட் வரி விதிப்பு முறை அமலுக்கு வந்துவிட்டது. சென்ட்ரல் எக்சைஸ் கோடு நம்பரை போட்டு விடுகிறார்கள். நம்முடைய சட்டத்தில் இன்னும் போடவில்லை.

The Committee records its deep sense of dismay and disappointment in issuing two different clarifications by the Commissioner of Commercial Taxes effecting a revenue loss to the tune of Rs.8,73,083/-. The Committee, therefore, decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department to the effect that what necessitated the Commissioner of Commercial Taxes to issue such two different clarifications.

2. G.O.(2D) No. 199, CT & Reg. (D2) Department, dated 26-12-2006.

இணை ஆணையர்: இது ஆர்.இ.பி. லைசென்ஸ் விற்பனை மீது 8 சதவிகித வரி விதிக்கப்பட்டது குறித்ததாகும். தண்டத் தொகையைத் தள்ளுபடி செய்து அறிவிக்கை வெளியிடப்பட்டது.

தலைவர்: ஆர்.இ.பி. லைசென்ஸ் என்பது என்ன?

இணை ஆணையர்: ஆர்.இ.பி. என்பது ஏற்றுமதி லைசென்ஸ். ஒருவர் ஒரு பொருளை ஏற்றுமதி செய்யும்போது அதற்குண்டான பொருட்களை இறக்குமதி செய்துகொள்வார். இவ்வாறு வேண்டாமென்றால் மற்றவர்களுக்கு விற்றுவிடலாம். இதுதான் ஆர்.இ.பி. லைசென்ஸ் என்பதாகும். இந்த லைசென்ஸ் விற்பனை வரிவிதிப்பிற்கு உட்பட்டதாகும் என்று கர்நாடக உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. ஆனால் சென்னை உயர் நீதிமன்றம் 1–4–1992–க்கு முன்னர் உள்ள வரி விதிப்பிற்கு தண்டத் தொகை விதிக்க வேண்டாமென்று கூறியது. அதனடிப்படையில், தண்டத் தொகையைத் தள்ளுபடி செய்து மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

3. G.O.(2D) No. 200, CT & Reg. (D2) Department, dated 26-12-2006.

தலைவர்: இந்த நேர்விலும் ஆணையாளர் இரு வேறு விளக்கங்களை அளித்துள்ளார். அதன்மூலம் ரூ.52,167/– தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

இணை ஆணையர்: இது தகரத் தகடுகள் மற்றும் தகரப் பாளங்கள் விற்பனை செய்தது பற்றியதாகும். தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு மேற்கண்ட பொருட்களுக்கு படிவம் 17–ன்படி உறுதிமொழி அளிப்பதன் அடிப்படையில் 3 சதவிகித சலுகை வரி விதிக்கப்பட்டது. ஆனால் பின்னர், மேற்படி பொருட்கள் Declared Goods பகுதியில் வராது என்று தெரிவிக்கப்பட்டது. Declared Goods என்று மத்திய அரசு ஒரு லிஸ்ட் வைத்திருக்கிறது. அதில் காட்டன் யார்ன், இரும்பு போன்ற பொருட்கள் இருக்கின்றன. தகரத் தகடு மற்றும் தகரப் பாளங்கள் இரும்பா இல்லையா என்பதில் டிஸ்பியூட் இருந்தது. பின்னர் இவை இரண்டும் இரும்புதான் என்று தெரிய வந்த பின்னர் 4 சதவிகித வரி விதிக்கப்பட்டது. பின்னர் வந்த காலகட்டத்தில் 4 சதவிகித வரியைக் கட்டியுள்ளனர். ஒரே ஒரு டீலருக்கு மட்டும் தள்ளுபடி செய்ய வரித் தள்ளுபடி ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அதனால் மேற்கண்ட தள்ளுபடி அறிவிக்கை வெளியிடப்பட்டது.

The Committee records its deep sense of dismay and disappointment in issuing two different clarifications by the Commissioner of Commercial Taxes effecting a revenue loss to the tune of Rs.52,167/-. The Committee, therefore, decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department to the effect that what necessitated the Commissioner of Commercial Taxes to issue such two different clarifications.

4. G.O.(2D) No. 202, CT & Reg. (D2) Department, dated 27-12-2006.

இணை ஆணையர்: டிம்பர் என்றால் பர்னிச்சர் செய்வது, மர வேலைகள் மற்றும் கதவு வேலைகளுக்காகப் பயன்படுவதாகும். ஆனால், சாப்ட் உட் என்பது மட்டி இரகத்தைச் சேர்ந்ததாகும். தீக்குச்சி செய்வதற்காகப் பயன்படுத்துவது. அதனால் டிம்பர் இனத்தில் இது சேராது என்று 5 சதவிகித வரி விதிக்கப்பட்டது. ஆனால் சென்னை உயர் நீதிமன்றம் இவ்வகை மரமும் டிம்பர் இனத்தில்தான் வரும் என்று தீர்ப்பளித்தது. பழைய காலத்திற்கு ஆணையாளர் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் வரி வசூல் செய்யப்பட்டது. அதனால் வரி வித்தியாசத் தொகையைத் தள்ளுபடி செய்வதற்காக மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

திரு. ஆர்.எம். பழனிசாமி: ஒரே ஆணையாளர் எப்படி இருவேறுவிதமாக வரிவிதிப்பைச் செய்ய முடியும்?

இணை ஆணையர்: அதை டிசைட் செய்யும்போது நியூ பேக்ட்ஸ் வருகின்றன. டீலர்களும் ஒரு சங்கம் மாதிரி ஏற்படுத்திக் கொண்டு செயல்படுகிறார்கள்.

திரு. ஞா. ஜான் ஜோசப்: கிளாசிபை செய்யும்போது ஏற்படுகின்ற கோளாறுகளினால் அரசுக்கு இலட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் இதனுடைய பொறுப்பு யாருக்கும் இல்லாமல் இருக்கிறது. எதிர்காலத்தில் இதைத் தடுப்பதற்கு விதி வரம்புகளை ஏற்படுத்த வேண்டும்.

இணை ஆணையர்: வாட் வரி விதிப்பு முறை வந்த பிறகு இம்மாதிரி நடைபெறுவது குறையும் என்று நினைக்கின்றோம்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 53/2007-2008

Sub. : Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959.

Ref. : 1. G.O.(2D) No.204, CT & Reg.(D2) Department, dated 28-12-2006.
2. G.O.(2D) No.205, CT & Reg. (D2) Department, dated 28-12-2006.
3. G.O.(2D) No.206, CT & Reg. (D2) Department, dated 31-12-2006.

Deputy Secretary (Assembly) stated that section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government had issued the above notifications.

1. G.O.(2D) No. 204, CT & Reg.(D2) Department, dated 28-12-2006

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): இந்த நேர்விலும், ஏற்கெனவே நாம் விவாதித்தது போல ஒரே ஆணையாளர் இரு விதமான க்ளாரிபிகேஷன் கொடுத்திருக்கிறார்.

இணை ஆணையாளர்: திருவாளர்கள் எஸ்.ஆர்.பி. என்டர்பிரைசஸ் நிறுவனம் சப்ளை செய்த மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை தொட்டிகள் சிமெண்ட் பிராடக்ட்ஸ் என்ற இனத்தில் சேராது என்ற அடிப்படையில் 8 சதவிகிதம் வசூலிக்கப்பட்டது. பின்னர், அந்த கற்கலவை தொட்டிகள் சிமெண்ட் பிராடக்ட்ஸ் தான் என்று சொல்லி அதிக சதவிகிதம் வரி செலுத்த வேண்டுமென்று ஆணையாளர் ஆணையிட்டார். மாநில கணக்குத் துறைத் தலைவர், ஆணையாளர் அளித்த இரண்டாவது விளக்கத்தை ஏற்றுக்கொண்டதால் வரி மதிப்பீடு திருத்தப்பட்டது. வரி உயர்த்தப்படும்போது, சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நேரடி பேச்சு வார்த்தைகள் நடந்தன.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: முதலிலேயே, மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை தொட்டிகள் சிமெண்ட் ப்ராடக்ட்ஸ் தான் என்று உறுதிப்படுத்துவதில் என்ன சிக்கல்? அந்த பொருள் சிமெண்ட்டில் தான் செய்யப்பட்டுள்ளது, அது சிமெண்ட் பிராடக்ட் தான் என்று முடிவுக்கு ஏன் முதலிலேயே வர முடியவில்லை?

இணை ஆணையர்: இந்த சப்ளை முழுவதும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செய்யப்பட்டது அப்போது அந்தமாதிரி வகைப்பாடு செய்யவில்லை என்று கருதுகிறேன்.

தலைவர்: ஆரம்பத்திலேயே இந்தப் பொருள் சிமெண்ட்டினால் உற்பத்தி செய்யப்பட்டது என்பதைப் பார்த்துக் கொடுத்திருக்கலாமே. We have delegated certain powers. The Committee feels that the powers delegated to the Executive had been exceeded.

The Committee records its deep sense of dismay and disappointment in issuing two different clarifications by the Commissioner of Commercial Taxes effecting a revenue loss to the tune of Rs.1,84,576/-. The Committee, therefore, decided to seek a clarification from the Government in Commercial Taxes and Registration Department as to the reasons for issuing two different clarifications by the Commissioner of Commercial Taxes.

2. G.O.(2D) No. 205, CT & Reg. (D2) Department, dated 28-12-2006.

தலைவர்: என்னென்ன பொருட்களுக்கு வரிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது?

இணை ஆணையர்: வயர் பைகள், ஊறுகாய் பொருட்கள் மற்றும் சாம்பார் பொடி போன்ற பொருட்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தலைவர்: இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிற சங்கம் சட்டபூர்வ சங்கமா?

இணை ஆணையர்: இச்சங்கம், கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தலைவராக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர் செயலாளராக உள்ளார்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: பிற மாவட்டங்களிலிருந்து இத்தகைய சலுகை கேட்டு கோரிக்கைகள் வந்துள்ளனவா?

இணை ஆணையர்: திண்டுக்கல்லில் இருந்து ஒரு கோரிக்கை வந்துள்ளது. அது பரிசீலனையிலுள்ளது.

3. G.O.(2D) No. 206, CT & Reg. (D2) Department, dated 31-12-2006.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத்தை மூடி விட்டார்கள். ஆனால் கிட்டத்தட்ட 12 இலட்சம் ரூபாய் வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இது மிகப் பெரிய தொகை.

தலைவர்: ஆண்டுக்காண்டு வரியை வசூல் செய்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்று கருதுகிறேன்.

இணை ஆணையர்: 1984-85 வருடத்திற்கான தொகை வசூலிக்கப்பட்டது. 1986-97 ஆம் ஆண்டிற்கான அசெஸ்மெண்ட் ஒரு வருடம் பெண்டிங் ஆக இருந்திருக்கிறது. இது தமிழ்நாடு அரசு நிறுவனம். மேலும் இதை கிளியர் செய்யவில்லை என்றால் அவர்கள் விற்க முடியாது.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 54/2007-2008

Sub. : Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959.

Ref: 1. G.O. (2D) No. 207, CT & Reg.(D2) Department, dated 31-12-2006.
2. G.O. (2D) No. 191, CT & Reg. (D2) Department, dated 11-12-2006.
3. G.O. (2D) No. 208, CT & Reg. (D2) Department, dated 31-12-2006.

Deputy Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of Tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government had issued the above notifications:

1. G.O. (2D) No. 207, CT & Reg.(D2) Department, dated 31-12-2006.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): இந்த நோ்வில் இரண்டு வேறுபட்ட ஆணையாளர் அளித்துள்ளதால் ரூ.6,32,336/– ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இணை ஆணையர்: முதலில் முந்திரி மரங்களின் ஏல விற்பனைத் தொகைக்கு 5 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டது. பின்னர் பயிரிடப்பட்ட பயிராக உள்ள முந்திரி மரங்களை வாங்குவதில், "Event of purchase" இல்லை என்றும், ஏலம் எடுத்தவரிடமிருந்து முந்திரிக் கொட்டை வாங்கும்போது 5 சதவிகிதம் வரி விதிக்க வேண்டுமென்று திருத்திய விளக்கம் அளிக்கப்பட்டது. எனவே, ஏலம் எடுத்தவர், 1982–83ஆம் ஆண்டிலிருந்து 1991–92ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.6,32,336/–ஐ தள்ளுபடி செய்வதென்று முடிவெடுக்கப்பட்டது.

சார்புச் செயலாளர்: இது விற்பனை அல்ல. லீசுக்கு விடப்பட்டது. இது சேல்ஸ் டர்ன்–ஓவர் இல்லை.

இணை ஆணையர்: இது துறையில் ஏற்பட்ட தவறுதான்.

The Committee decided not to recommend any modification.

2. G.O. (2D) No. 191, CT & Reg. (D2) Department, dated 11-12-2006.

இணை ஆணையர்: காகிதத்திற்கு ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டுள்ளதால், ஜெராக்ஸ் நகல்களுக்கு வரிவிதிக்கத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி பொது விற்பனைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. கர்நாடக நீதிமன்றத்தில் ஜெராக்ஸ் நகல் ஓர்க்ஸ் காண்ட்ராக்ட் தான் என்று சொல்லப்பட்டது. ஆனால் சென்னை உயர்நீதிமன்றம், ஜெராக்ஸ் நகல் காகிதம் வரி விதிப்புக்கு உட்பட்டது என்று தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் (திருத்தத்திற்கு முன்னர்) ஜெராக்ஸ் நகல் காகித விற்பனை மீது வரி விதித்தனர். திருத்தம் செய்யப்பட்ட பிறகு, 1993–94 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.12,50,940–ஐ தள்ளுபடி செய்ய அரசு முடிவு செய்தது.

The Committee decided not to recommend any modification.

3. G.O. (2D) No. 208, CT & Reg. (D2) Department, dated 31-12-2006.

இணை ஆணையர்: அயர்ன் அண்டு ஸ்டீல் அறிவிக்கப்பட்ட பொருள், ஆகவே அதற்கு பார்ம்–17 சலுகை கிடையாது என்ற நிலை இருந்தது. பெங்கால் இரும்பு கழகத்தின் வழக்கில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, வார்ப்பிரும்பிலான வார்ப்படங்கள் அறிவிக்கப்படாத பொருட்கள் என்ற நிலையை துறை எடுத்து தயாரிப்பாளர்கள் 3% சலுகை கட்டணத்தை செலுத்தினர். வசந்தம் வார்ப்படச்சாலை வழக்கில், வார்ப்பிரும்பிலான வார்ப்படங்கள் வரிவிதிப்பிற்கு உட்பட்டவை என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, 1% வரி வேறுபாட்டுத் தொகையை வசூலிக்க அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன. ஆனால், தள்ளுபடி செய்யும்

குழுவானது, 1% வேறுபாட்டுத் தொகையை தள்ளுபடி செய்வதற்கு பரிந்துரைத்துள்ளது. எனவே, அரசு, வரி வேறுபாட்டுத் தொகை, மேல் வரி, கூடுதல் மேல் வரி மற்றும் அபராதத் தொகையான ரூ.9,14,397/–ஐ தள்ளுபடி செய்வதற்காக இந்த அறிவிக்கை வெளியிட்டது.

துணைச் செயலாளர் (சட்டமன்றம்): இது வரை குழு கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்த வணிக வரி துறை அதிகாரிகளுக்கு குழுவின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee decided not to recommend any modification.

FRIDAY, THE 21st SEPTEMBER 2007

The Committee on Delegated Legislation met at 11.00 a.m. on Friday, the 21st September 2007 in the Conference Hall, Topslip, Coimbatore.

The following were present:

CHAIRMAN

Thiru. Durai Chandrasekaran

MEMBERS

Thiru. M. Anbazhagan

Thiru G. Senthamizhan

Thiru T.A. Meganathan

Thiru G. John Joseph

SECRETARIAT

Thiru A.M.P. Jamaludeen .. Deputy Secretary

Tmt. Janahee, Joint Secretary to Government, Law Department, was also present.

The following officials from Commercial Taxes Department introduced themselves before the Committee:

COMMERCIAL TAXES DEPARTMENT

1. Thiru. R. Chandra Kanthan,
   Joint Commissioner,
   O/o. The Commissioner of Commercial Taxes,
   Chepauk, Chennai-5.

2. Thiru. K. Sekar,
   Deputy Commissioner,
   O/o. The Commissioner of Commercial Taxes,
   Chepauk, Chennai-5.

4. Thiru Neelamegan,
   Under Secretary to Government,
   Commercial Taxes Department,
   Chennai-600 009.

The Committee took up for consideration the following Memoranda:

The deliberations are summarised as under:

MEMORANDUM No. 55/2007-2008

Sub: Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959.

Ref:
1. G.O. Ms. No. 87, Commercial Taxes & Religious Endowments (D2) Department, dated 31-3-1995.
2. G.O. Ms. No. 132, Commercial Taxes & Religious Endowments (D2) Department, dated 23-5-1995.
3. G.O. Ms. No. 244, Commercial Taxes & Religious Endowments (D2) Department, dated 30-6-1992.
4. G.O. (D) No. 173, Commercial Taxes & Religious Endowments (D2) Department, dated 25-4-1995.

Deputy Secretary (Assembly) stated that Section 17(4) of the Tamil Nadu General Sales Tax Act,1959 (T.N. Act 1 of 1959) empowered the Government to remit the whole or any part of tax or penalty or fee payable in respect of any period by any dealer under this Act and accordingly the Government had issued the above notifications.

He further stated that the above four notifications had already been placed on the Table of House on 25-8-1995, 15-9-1995, 11-10-1993 and 14.7.1995 respectively. But the Explanatory Notes to the above notifications had not been placed together with the notifications at the time of placing them on the Table of the House. Then, as per the suggestion of the Committee on Delegated Legislation, the above four notifications along with the Explanatory Note had been placed again on the Table of the House in the Thirteenth Assembly during May and June 2007.

தலைவர்: 1995–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டு சட்டமன்றத்தில் வைத்துவிட்டு அந்த அறிவிக்கைக்கான விளக்கக் குறிப்பை இப்போது கொடுப்பதில் என்ன purpose serve ஆகும்? ஏற்கெனவே எல்லா அறிவிக்கைகளிலும் விளக்கக் குறிப்புகள் இடம்பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எந்தச் சூழ்நிலையில் வரி விலக்கு/தள்ளுபடி கொடுக்கப்பட்டது என்பதற்கான காரணங்கள் விளக்கக் குறிப்பிலேதான் இருக்கும். **எனவே, இனி வரும் காலங்களில் இம்மாதிரியான நிகழ்வுகள் ஏற்படக் கூடாது என்று குழு விரும்புகிறது.**

சார்புச் செயலாளர்: இரண்டு ஜி.ஓ.–வில் மட்டும் ஒமிஷன் ஆகிவிட்டது. குழு சொன்னதை ஏற்று அதன்பிறகு எல்லாவற்றிலும் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

தலைவர்: குழு உறுப்பினர்கள் கேள்வி கேட்டால் Hon. Speaker has to answer. The relevant notification was placed on the Table of the House during the year 1993 and 1995. The Committee feels that no purpose would be served in placing such Notifications without Explanatory Notes and placing the Notifications again with Explanatory Notes after a lapse of 12 years.

The Committee decided not to recommend any modifications.

MEMORANDUM No. 56/2007-2008

Sub: Notifications issued under Tamil Nadu General Sales Tax Act, 1959.

Ref: 1. G.O. Ms. No.143, Commercial Taxes and Registration (B2) Department, dated 14-11-2006.

2. G.O. Ms. No.192, Commercial Taxes and Registration Department, dated 30-12-2006.

3. G.O. Ms. No.195, Commercial Taxes and Registration Department, dated 31-12-2006.

*****

Deputy Secretary (Assembly) stated that Section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government to issue notifications with prospective or retrospective exemption from payment of tax or reduction in the rate of tax under the said Act on the sale or purchase of any specified goods at all points or at a specified point or points in the series of sales and accordingly the Government had issued the above notifications.

1. G.O. Ms. No. 143, Commercial Taxes and Registration (B2) Department, dated 14-11-2006.

No modification was recommended.

2. G.O. Ms. No.192, Commercial Taxes and Registration Department, dated 30-12-2006.

இணை ஆணையர்: ஏற்கெனவே அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ரஷ்யா தூதரக அலுவலர்கள் பயன்பாட்டிற்காக பொருள்கள் விற்பனை செய்யும்போது அவர்கள் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. பின்னர், அமெரிக்கா இந்தியத் தூதரக அலுவலர்களுக்கான மேற்கண்ட சலுகையை

விலக்கிக்கொண்டதையடுத்து, பரஸ்பர முறையைப் பின்பற்றி, மத்திய அரசு அறிவுறுத்தலின்பேரில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் முதலிய நாடுகளிலிருந்து வரிச் சலுகைகளைத் திரும்பப் பெறுவதைச் செயல்படுத்துவதற்காக மேற்கண்ட அறிவிக்கை வெளியிடப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

3. G.O. Ms. No.195, Commercial Taxes and Registration Department, dated 31-12-2006.

No modification was recommended.

MEMORANDUM No. 57/2007-2008

Sub: Notifications issued under the Tamil Nadu General Sales Tax Act, 1959.

Ref : 1. G.O. Ms. No.191, Commercial Taxes and Registration Department, dated 29-12-2006.

2. G.O. Ms. No.144, Commercial Taxes and Registration (B2) Department, dated 14-11-2006.

*****

Deputy Secretary (Assembly) stated that Section 17(1) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (Tamil Nadu Act 1 of 1959) empowered the Government to issue notifications with prospective or retrospective exemption from payment of tax or reduction in the rate of tax under the said Act on the sale or purchase of any specified goods at all points or at a specified point or points in the series of sales and Section 17(2) of the said Act empowered the Government to grant exemption

from payment of tax or reduction in the rate of tax notified under sub-section (1) and to extend to the whole of State or to any specified area or areas therein subject to such restrictions and conditions as specified in the notification and accordingly the Government had issued the above notifications.

1. G.O. Ms. No.191, Commercial Taxes and Registration Department, dated 29-12-2006.

தலைவர்: ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து மட்டும் வாங்கக்கூடிய இயந்திரத்திற்கு மட்டும் வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஏன் அவ்வாறு செய்யப்பட்டது?

இணை ஆணையர்: இந்த அறிவிக்கை ஆரோவில் நிறுவனம் சம்பந்தப்பட்டது. இந்நிறுவனம் அக்குவாடைன் என்ற நிறுவனத்திடமிருந்து கடல் நீரை நன்னீராக்கும் பயோடைனமைசர் என்ற இயந்திரத்தை வாங்கி அதை சுனாமி பாதித்த பகுதிகளில் நிறுவிட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரி விலக்கு அளிக்கப்பட்டது. மேலும் அக்குவாடைன் நிறுவனத்திடம்தான் கடல் நீரை நல்ல குடிநீராக மாற்றக்கூடிய இயந்திரம் இருந்தது. அதனால் அவர்களுக்கு இந்தச் சலுகை தரப்பட்டது.

The Committee decided not to recommend any modification.

2. G.O. Ms. No.144, Commercial Taxes and Registration (B2) Department, dated 14.11.2006.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: விற்பனை வரி திருப்பிக் கொடுத்திருப்பதை நாம் உறுதிப்படுத்தி இருக்கிறோமா?

இணை ஆணையர்: விற்பனையாளர் மேற்கண்ட அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ளதுபோன்று ஒரு சான்றிதழை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்றுத் தர வேண்டும். ரீபன்டு செய்திருந்தால்தான் அவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

The Committee decided not to recommend any modification.

MEMORANDUM No. 58/2007-2008

Sub. : Notification issued under Tamil Nadu Tax on Entry of Goods into Local Areas Act, 2001.
[G.O. Ms. No. 98, Commercial Taxes Registration (C2) Department, dated 5.9.2006.]

Deputy Secretary (Assembly) stated that Section 11, of the Tamil Nadu Tax on entry of Goods into Local Areas Act, 2001 (T.N. Act 20 of 2001) empowered the Government in the public interest by notification, exempt any specified class of importers from payment of the whole or part of the Tax payable under this Act and that in exercise of the powers conferred under the above Act, the Government had issued orders exempting the tax payable under Section 3 of the said Act by Mangalore Refinery and Petrochemicals Limited who bring the scheduled goods specified in the schedule to the said Act into any local area for the purpose of re-sale either under the Tamil Nadu General Sales Tax Act, 1959 or Central Sales Tax Act, 1956.

இணை ஆணையர்: இந்த அறிவிக்கை, மங்களூர் ரிபைனரி மற்றும் பெட்ரோகெமிக்கல் லிமிடெட் நிறுவனம் சம்பந்தப்பட்டதாகும். இந்த நிறுவனம் அட்டவணையில் முன்பு இல்லை. ஐ.ஒ.சி., பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தோ பர்மா பெட்ரோலியம் போன்ற நிறுவனங்கள் மட்டும்தான் பட்டியலில் இருந்தன. இந்த மங்களூர் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் ஆகும். இவர்கள் நுழைவு வரியை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் அரசு ஆய்வு செய்து மேற்கண்ட அறிவிக்கையை வெளியிட்டது.

The Committee decided not to recommend any modification.

M. SELVARAJ,
Secretary.